# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம்௵ ஜூலை௴ 24௳ [ந 156

பிரஸங்கம் CLVI.

## இதாலி சரணடையவேண்டும்.

### இதாலியர் முஸோலினிக்காகவும், ஹிட்லருக்காகவும் உயிர் துறக்கப்போகிறார்களா?

**இதாலியருக்கு ரூஸ்வெல்டு—சர்ச்சில் செய்தி—ஜூலை 16, 1943.**

இந்தச் செய்தியை இதாலியருக்கு அமெரிக்காவின் ஜனாதிபதியும், பிரிடனின் பிரதம மந்திரியும் விடுக்கிறோம். இத்தருணத்தில் பிரிடிஷ், அமெரிக்க, கானேடியப் படைகள் ஜெனரல் ஈசன்ஹவர், ஜெனரல் ஸர் H. அலெக்ஸாண்டர் அவர்களின் தலைமையின் கீழ் உங்கள் தேசத்தைச் சேர்ந்த பூமிக்குள்ளேயே பிரவேசித்து போர் நடத்திவருகின்றன.

முஸோலினியும் அவரது பாஸிஸ்டு கூட்டமும் மானங்கெட்ட முறையில் நடந்து வந்திருப்பதே இப்போது நீங்கள் துன்பமடையக் காரணம்.

தேசங்களையும், ஸ்வதந்திரத்தையும் அழிக்க முன்வந்துள்ள ஹிட்லரைப் பின்பற்றி முஸோலினி உங்களை யுத்தத்தில் ஆழ்த்தினான். ஹிட்லர் ஏற்கனவே ஜயித்துவிட்டதாக எண்ணி முஸோலினி உங்களை யுத்த வெள்ளத்தில் ஆழ்த்தினான். இதாலியானது ஆகாய மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் தாக்குதலுக்குட்படக்கூடிய நிலைமையிலிருந்தபோதிலும் இங்கிலாந்தையும், ருஷ்யாவையும் உலக முழுவதையும் ஜயிக்க எண்ணிய ஹிட்லருக்குதவ முஸோலினி உங்கள குமாரர்களையும் உங்கள் கப்பல்களையும் உங்கள் விமானங்களையும் ஏராளமாக அனுப்பிவைத்தான்.

நாஸிக் கக்ஷிக்காரர்களின் அமுலுக்குட்பட்ட ஜெர்மனியின் சூழ்ச்சிகளில் நீங்கள் கலந்து கொண்டது இதாலியின் பிரசினமான ஸ்வதந்திரத்திற்கும், நாகரீகத்திற்கும் முற்றிலும் பொருத்தமில்லாதது. அந்த ஞானமார்க்கமே பிரிடிஷ் அமெரிக்கக் கலா வளர்ச்சிக்கு முக்கிய காரணம்.

உங்கள் ஸோல்ஜர்கள் சண்டை செய்வதெல்லாம் இதாலிக்காகவல்ல. நாஸி ஜெர்மனிக்காகத்தான். அவ்வீரர்கள் மிக்க தைரியத்துடன் போராடி வந்திருக்கின்றனர். ஆனால் ருஷ்யப் போர்முனையிலும், எல் அலமீன் முதல் கேப் பான் முடிய எல்லாப்போர்முனைகளிலும். ஜெர்மானியர் உங்களைக் கைவிட்டுக் காட்டிக்கொடுத்துவிட்டார்கள்.

**எல்லாப் போர்முனைகளிலும் சின்னாபின்னமாகி வருகிறது.**
**ஜெர்மனியின் தோல்வி நிச்சயம்.**

உலக முழுவதையும் வெல்வதுபற்றி ஜெர்மானியர்கொண்ட நம்பிக்கை எல்லாப் போர்முனைகளிலும் சின்னாபின்னமாகி வருகிறது. இதாலிய வானத்தில் அமெரிக்க, பிரிடிஷ் விமானங்கள் ஆதிக்கம் பெற்றுவிட்டன. மத்தியதரைக்கடலில் திரண்டுள்ள நேசதேசக் கப்பற்படை பலத்தால் இதாலியக் கடற்கரைகளுக்குப் பேராபத்து ஏற்பட்டிருக்கிறது.

ஜெர்மானியர் தங்களையே அனைவரும் எஜமான ஜாதியாக மதிக்கவேண்டுமென்கின்றனர் அங்கனம் மதிக்க மறுக்கிறவர்களை அடிமைப்படுத்தியும், வாட்டி வதைத்து வரும் நாஸிகளை அடியோடு ஒழிக்க நாங்கள் உறுதிகொண்டிருக்கிறோம்.

இதாலியர் பிழைத்திருக்கவேண்டுமானால் அவர்கள் கௌரவமாக நேசதேசக் கக்ஷியினிடம் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை. நாஸிகளை ஆதரித்து நிறகும் பாஸிஸ்டு ஆட்சிக்கு நீங்கள் மேலும் இடங்கொடுத்து வருவீர்களாயின் அதற்குத் தக்கவாறு நீங்கள் துன்பத்தை அனுபவிக்க வேண்டியதுதான்.

**நீங்கள் யோசித்துப் பாருங்கள்.**

இதாலியைப் படையெடுத்து இதாலிய தேசத்தை அழித்துவிடவேண்டுமென்று நாங்கள் பிரியப்படவில்லை. இதாலியின் அதோகதிக்குக் காரணமான நாஸிக்கும்பலையும் உங்களை விபரீத வழியில் நடத்திச்சென்ற தலைவர்களையும் ஒழித்துவிடுவோம் நேசக்கட்சிப் படைகளை எதிர்ப்பதில் நீங்கள் இன்னும் சிதறும் ஒவ்வொரு சொட்டு ரத்தமும் பாஸிஸ்டு நாஸித் தலைவர்கள் உரிய தண்டனைப்பெறும் நாளை இனிது ஒத்திவைக்கக் கூடியதாகும்.

உங்களுடைய சகலவிதமான அக்கரைகளையும் உங்களுடைய கலைஞானத்தையும் நாஸிக் கக்ஷிக்காரர்களும் உங்களுடைய துரோக புத்தியுள்ள தலைவர்களும் காட்டிக்கொடுத்து விட்டார்கள். இவ்விருவர்களையும் ஒழித்தாலன்றி இதாலி ஐரோப்பிய சமரசத்தில் மதிப்பிக்குறிய ஒரு ஸ்தானத்தைப் பெறமுடியாது.

இதாலிய மக்களே, உங்கள் சுயமரியாதைக்கும் உங்கள் சுய நலத்திற்கும், தேசத்தின் கௌரவத்திற்கும், க்ஷேமத்திற்கும் அமைதிக்கும் சிறந்த வழி எதுவென்று சிந்தித்துப் பாருங்கள். ஹிட்லர் முஸோலினி இவர்களுக்காக இதாலியர் உயிரை விடுவதா, அல்லது இதாலிக்காகவும், நாகரீகத்துக்காகவும் உயிர் வாழ்வதா என்று நீங்கள் முடிவு செய்ய வேண்டிய சமயம் வந்துவிட்டது.

---

# வார யுத்தச் செய்திகள்.

## 17—7—43-லிருந்து 23—7—43-வரை.

**இதாலி.**—ஸிஸிலியில் பாதி பாகம் நேசதேசங்களின் வசமாகிவிட்டது. அந்தத் தீவின் முதுகெலும்பு போன்ற வடக்கேயுள்ள மலைகளுக்கு 20 மைலில் துருப்புகள் வந்துவிட்டன. அச்சு நாடுகளின் மத்தியப் போர்முனை குலைந்துவிட்டது. வடகிழக்கை நோக்கி எதிரி பின் வாங்குகிறான்.

மேற்குப் போர்முனையில் காரோ, பாண்டா ஒலிவியோ, காமிஸோ ஆர்ஜெண்டினோ, எம்பிடாகிள் துறைமுகம் முதலியவை பிடிபட்டுவிட்டன. ஸாண்டா கடாரினாவை நோக்கி யுத்தம் நடைபெறுகிறது. மத்திய அரங்கத்தில் கால்டா நிஸாதா விழுந்துவிட்டது. என்னா வுக்கு அபாயமேற்பட்டிருக்கிறது. கிழக்குப் போர்முனையில் பிரிடிஷ் 8-ம படை கடானியா வின் வெளிப்பக்கத்தில் ஜெர்மானியர்களுடன் கடும் போர் நடத்திவருகிறது.

ஜுலை 17-ம் தேதியன்று 500-க்கு மேறபட்ட வெடி விமானங்கள் நேபிள்ஸின் பேரில் ஒன்றரை மணி நேரம் குண்டுகளைப் பொழிந்து அரசாங்க ஆயுதசாலையையும், மீன் வெடி உற் பத்தி செய்யும் தொழிற்சாலையையும் இருப்புப் பாதைகளையும் நாசமாக்கிவிட்டன.

ஜுலை 19-ம் தேதியன்று இரண்டரை மணி நேரம் ரோம் நகரம் வெடி விமானங் களால் தாக்குண்டது. பிரதம பாதிரியாரிருக்கும் இடம் மட்டும் தாக்கப்படவில்லை. 350 டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன. தாக்குதலுக்குமுன் துண்டுப் பிரசுரங்கள் மூலமாக எச்சரிக்கை செய்யப்பட்டது லிட்டாரியா, ஸான் லோரன்ஸோ என்னும் எஞ்ஜின்கள் வைக்கும் சாலையும், ஸியாம்பினோ, லாப்ரியோ என்னும் விமான தளங் களும், டாப்னெல்லி என்னும் எஃகு தொழிற்சாலையும், எண்ணெய்க் கிணறுகளும் இரும்புப் பாதைகளும் நாசமாகிவிட்டன. போடோ படங்களை கவனித்தால் லிட்டாரியோ தளத்தில் 400 கெஜங்கள் அகலத்துக்கும் இரண்டு மைல்கள் நீளத்துக்குமுள்ள பிரதேசம் பிளவுபட் டிருக்கிறதென்றும், தண்டவாளங்கள் சின்னாபின்னமாகியும், பயங்கரமான பள்ளங்களும், சாமான்களெல்லாம் நொருங்கித் தவுடுபொடியாகியுமிருக்கும் காக்ஷியும் காணப்படுகிறது.

**ருஷ்யா.**—ஜெர்மானியரின் முன்னேற்றம் தணிந்துவிட்டது. இப்பொழுது ருஷ்யர்கள் முன்னேறித் தாக்குகிறார்கள். மத்திய ருஷ்யாவிலுள்ள ஜெர்மனிக்கு முக்கியதளமான ஒரலை இரண்டு பகுதிகளில் தாக்கி ருஷ்யப்படை வளைத்துக் கொண்டுவிட்டது. மெடென்ஸ்க், வொரஷிலோவோ கஸ்டிஷி முதலிய இடங்கள் ருஷ்யர்வசமாகின. ஜெர்மனியின் ஜீவனாடி போன்ற ஒரல், பிரியான்ஸ்க் இரும்புப் பாதை துண்டிக்கப்பட்டுவிட்டது.

ருஷ்ய முன்னேற்ற யுத்தம் மற்ற அரங்கங்களுக்கும் பரவிவிட்டது. வடக்கே கரிலியன் கடல் முதல் தெற்கே நோவாராஸிஸ்க் வரையில் ஆரம்பமாகிவிட்டது. டான் பாஸ் பிராந்தியத்தில் செம்படை வடக்கு டானெட்ஸையும் மீயுஸ் நதியையும் தாண்டிவிட்டன.

**பஸிபிக் யுத்தம்**—நியூ ஜார்ஜியாவிலுள்ள ஸலாமூவாவுக்கருகில் மூபோ என்னும் ஜப்பானிய தளம் பிடிபட்டுவிட்டது. இந்த நடவடிக்கையில் நேசதேசப்படைகள் குன்றுகளில் ஏற வேண்டியிருந்தது. தாக சாந்திக்காக மூங்கில் ரசத்தைப் பானம் செய்தார்கள். டெம்பூ மலையிலும் ஸலாமூவாக்கருகிலுள்ள ஒாடுபியிலும் ரோந்துப்படைகளுக்குள் சச்சரவுகள் நடைபெற்றன. மூபோ பிரதேசத்தில் ஆம்புமலையிலிருக்கும் நேசதேசப்படைகளை ஜப்பானியர்கள் 9 தடவை தாக்குதல் செய்தும் பயன்படவில்லை.

முண்டா இடைவிடாது தாக்கப்படுகிறது. முற்றுகைக்குட்பட்ட ஜப்பானியத் துருப்புகள் ஸப்ளை வசதிகளின் சிரமத்தினால் சோர்வடைந்து வருகின்றன.

உதவிப்படைகளையும், ஸப்ளையும் எடுத்துக்கொண்டு விலாவுக்கு வந்துகொண்டிருந்த 3 சஞ்சாரிகளையும், 6 நாசகாரிகளையும் 2 துருப்பேற்றிச் செல்லும் கப்பல்களையும் நேசதேச வெடி விமானங்கள் சிதற அடித்து, ஒரு சஞ்சாரியையும், இரண்டு நாசகாரிகளையும் மூழ்கடித்துவிட்டன. மூன்றாவது நாசகாரி மூழ்கியிருக்கக்கூடும். மற்றொரு நாசகாரி பழுதாக்கப்பட்டது. மற்ற கப்பல்கள் தப்பி ஓடிவிட்டன.

கொலம்பாங்காரவுக்கருகில் ஒரு இரவில் நடைபெற்ற போரில் 3 ஜப்பானிய நாசகாரிகள் குண்டுகளால் அடிக்கப்பட்டன. நியூ பிரிடனில் ஆக்ஸ்பர்ட் முனையில் ஒரு ஜப்பானிய சாமான் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. கன்னிங்காம் முனையில் மாண்டெகு துறைமுகத்தில் படகுகள் நொருக்கப்பட்டன.

**பர்மா.**—பர்மாவில் யுத்தப் போக்கில் மாறுதலில்லை. அரக்கானிலும், சின்மலைகளிலும், ஸம்பராபம் பிராந்தியத்திலும் ரோந்துப்படைகளுக்குள் சில்லரை சச்சரவுகள் நடைபெறுகின்றன. ஜூலை 15-ம் தேதிக்குள் 5, 6, 15 தேதிகளைத் தவிர மற்ற நாள்களில் மழை பெய்த போதிலும், அமெரிக்க விமானங்கள் அநேக இடங்களைத் தாக்கியிருக்கின்றன. இந்த வாரத்தில் கீழ்க்கண்ட பிரதேசங்கள் தாக்கப்பட்டன, மெயக்டிலா, ஷ்வேலி பாலம், ஹண்டர் விரிகுடா எலிஸபெத் தீவுகளிலுள்ள கடற்கரை விமானங்கள், மீஞ்சானிலுள்ள பருத்தி ஆலைகள், மணிவாவிலுள்ள இரும்புப் பாதை மார்க்கங்கள், மூ பாலம், சௌமாங்கி, காலமகா, காவான், கட்ராங்கியாங் முதலிய இடங்களிலுள்ள சாமான் கிட்டங்கிகள், கலாடான் நதியிலுள்ள படகுகள், ஸோப்ஸாப்பிலுள்ள பாலம், காலிமியோ, ராதேடாங்க், மின்பியா, மேற்கு போரான்கா தீவுக்கப்பாலுள்ள சாமான் படகுகள்.

ஜூலை மாதம் 19-ம் தேதியன்று தனிப்பட்ட ஒரு ஜப்பானிய விமானம் ஸிலோனின் கீழ்க்கரையை அணுகிற்று. ஆனால் குண்டுகளை வீசவில்லை.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**12—7—43.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—போக்குவரத்து, தொழிற்சாலை லக்ஷியங்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

சுரங்கவெடி அறுக்கும் கப்பல்—டச்சுக்கடற்கரை.—(2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை; ஒரு எதிரி விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது).

**இதாலி (Italy),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

இதாலியிலுள்ள சான்ஜியோவன்னி (Sangiovanni), ரெஜியோ டி கலாபிரியா (Reggio de Calabria).

எதிரித் துருப்புகள், போக்குவரத்து சாதனங்கள்.—ஸிஸிலி (Sicily).

கப்பல்கள்.— டிரேனியன் (Tyrrhenian) கடல்.

துறைமுகம்.—மெஸ்ஸினா (Messina)—(28 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; 11 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலியிலுள்ள டூரின் (Turin).

ருஷ்யா (Russia).

விமானச்சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

முகாம் செய்திருக்கும் பிரதேசங்கள்.—அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

ஜப்பானியச் சைனியங்கள்.—நியூ கினியிலுள்ள ஸாலமூவா (Salamaua).

விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

ரயில்ரோட் ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள யுவாட்டாங் (Ywatung).

ஜப்பானிய தளம்.—பர்மாவிலுள்ள நான்வாசெய்க் (Nanvaseik).

பர்மாவிலுள்ள சாகன் (Sagun), மிங்கான் (Mingan), மோகாங் (Mogang), செடான் (Seton), டாரோ (Taro), டகாங்கு (Taganku).

**13—7—43** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—லக்ஷியங்கள்— வடக்கு ஜெர்மனி (Northern Germany).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—ஸிஸிலியிலுள்ள மிலோ (Milo), கடானியா (Catania).

எதிரிக் கப்பல்கள்.—ஸிஸிலிக்கு வடக்கில்—(2 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டது).

போக்குவரத்து ஸ்தலம்.—என்னு (Enna).—(42 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; 7 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—கொலம்பங்காராவிலுள்ள விலா (Vila).

பொகெய்ன் வில்லித்தீவிலுள்ள பல்லாலி (Ballale).

நியூ கினியிலுள்ள ஸாலமூவா (Salamaua).

3 ஜப்பானியப் படகுகள்.—செய்டார் (Saidor) பிரதேசம்.

விமான நிலயங்கள்.—நியூ கினியிலுள்ள லே (Lae); சை தீவிலுள்ள லாங்கோயர் (Langgoer); ஆரோத்திலிலுள்ள டோபோ (Dobo).

எதிரி ரயில்ரோட் ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள மிங்யான் (Myingyan).

**14—7—43.** (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகலிலும், இரவிலும் நடந்த குண்டுவீச்சுகளிருந்ததாக ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

துறைமுகங்கள், ரயில்வே போக்குவரத்துகள்.—ஸிஸிலியிலுள்ள மெஸ்ஸினா (Messina), என்னு (Enna).

வேவு பார்த்தல்.—நேசதேசக் கப்பல்கள், கடற்கரைகள், யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

விமான நிலயங்கள்.-தெற்கு இதாலி (South Italy).

எதிரிக் கப்பல்கள்.—டிரேனியன் (Tyrrahenian) கடல்.

சேனை தயார் செய்து சேகரிக்குமிடங்கள்.—மெஸ்ஸினா (Messina).

கப்பல்கள்.—கிரீஸ் (Greece).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஜங்ஷன்கள்.—ஓரல் (Orel).

யுத்த தளவாடக் குவியல்கள்.—வால்க்காப் (Volkhov).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.—அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

எதிரி ஸ்தாபனங்கள்.-பர்மாவிலுள்ள மெய்க்திலா (Meiktila), மிங்யான் (Myingyan).

**15—7—43.** (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(9 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன; 7 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—விமானத் தாக்குதல்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வடக்கு பிரான்ஸ் (Northern France).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

கப்பற்கட்டுந்துறைகள், ரயில்வே போக்குவரத்துகள்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).

கப்பற்கட்டுந் துறைகள்.—ஸிஸிலியிலுள்ள பாலர்மோ (Palermo), ஸிஸிலி (Sicily), தெற்கு இதாலி (S. Italy).

விமான நிலயங்கள்.—இதாலியிலுள்ள போகியா (Foggia), டாராண்டோகுடாவிலுள்ள மெடபாண்டோ (Metaponta).

விமான நிலயங்கள்.-தெற்கு இதாலியிலுள்ள விபோ வாலன்ஷியா (Vibo Valentia), குரோடோனி (Crotone), ரெஜியோ (Reggio).

படது போக்குவரத்து முடிவு —இதாலியிலுள்ள ஸானஜியோவன்னி (Sangiovanni). (13 அச்சுநாட்டு விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 4 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளம்.—நியூ கினியிலுள்ள மூபோ (Mubo),

விமான நிலயம்.-காஹிலி (Kahili), பல்லாலி (Ballale).

பட்டணங்கள்.—டிமோரிலுள்ள கொபாங் (Koepang).

கப்பல்கள்.—பீகிள் கால்வாய் (Beagle channel).

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

**16—7—43.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே தளங்கள்.—அப்பிவில் (Abbville). (3 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. நேசதேச விமான நஷ்டம் இல்லை).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—இதாலியிலுள்ள பாரி (Bari).

எலெக்டிரிக் டிரான்ஸ்பாமர் ஸ்டேஷன்.—இதாலியிலுள்ள புருகிரியா (Brugherio), ஸிஸாலகோ (Cisalago).

இலக்குகள்.—போலோஞ (Bolcgna).

ரயில்வேக்கள்.—இதாலியிலுள்ள மிலான் (Milan).

போக்து வரத்துக்கள்,விமான நிலயங்கள்.—ஸிஸிலி (Sicily),

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள், ஜப்பானியச் சைனியங்கள்.—மூண்டா (Munda).

ஜப்பானியச் சைனியங்கள்.—அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

ஜப்பானியரால் ஆக்கிரமிக்கப்பட்ட பர்மா.—அக்யாப் (Akyab) தீவு.

**17—7—43.** (சனிக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—விமான நிலயங்கள், ரயில்வே இலக்குகள்—பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium).

கப்பல்கள்.-டச்சுக் கடற்கரை(Dutch coast). (1 நேசதேச விமானம் காணப்படவில்லை).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

(21 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இதாலிய யுத்த தளவாடங்கள்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).

சேனை தயார் செய்து சேகரிக்குமிடங்கள்.—நேபிள்ஸ் (Naples).

துறைமுகம்.—ஸிஸிலியிலுள்ள கட்டானியா (Catania).

போக்து வரத்துக்கள்.—ஸிஸிலி (Sicily).

விமான நிலயங்கள்—இதாலியிலுள்ள மாண்டி காவிர்னோ (Monte Carvino), போமிக்லியானோ (Pomigliano).

ருஷ்யா (Russia).

ரயில்வே ஜங்ஷன்.—ஓரல் (Orel).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

அலூஷினிலுள்ள கிஸ்கா (Kiska), நாருத்தீவு (Nauru).

படகுகள்.—பர்மாவிலுள்ள ஹண்டர் கடல் பிரதேசம்.

படகுகள்.—பர்மாவிலுள்ள மியிபான் (Myebon).

துருப்புகள்.—சினோ (Sinoh)ப்பிரதேசம்.

துருப்புகள் தங்கியிருக்கும் குடிசைகள்.—பர்மாவிலுள்ள காலிமியோ (Kalymyo).

பஞ்சு யந்திரசாலைகள்.—பர்மாவிலுள்ள மிங்யான் (Myingyan).

கடற்கரையிலுள்ள சாமான் வைக்குமிடங்கள் பாதைகள், சேமிப்புகள். — முனிவா (Monywa)விற்கில்.

கப்பல்.—ஐராவதி (Irrawaddy).

எதிரிச் சைனியங்கள்.—பர்மாவிலுள்ள சாமாங்கா (Chaumawngga), கலம்கா (Kalumga).

**18—7—43.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள்—அப்பிவில் (Abbeville). (12 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகள்.—டச்சு கடற்கரை. (2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

துணைக்காவலோடுகூடிய எதிரி கப்பற் கூட்டங்கள்.—டென்ஹெல்டர் (Denhelder).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

கப்பற்கட்டுந்துறைகள்.—கட்டானியா

போக்குவரத்துகள்.—ஸிஸிலி (Sicily).

கப்பல்கள்.-டிரானியன்(Tyrrahenian)கடல்.

கடல் விமான தளம்.—கிரீஸிலுள்ள ப்ரபெஸா (Prebeza).

கூட்ஸ் ரயில்கள் வண்டிகள்.-தெற்கு இதாலி (South Italy).

கப்பல்கள்.—ஸிஸிலிக்கு வடக்கு.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஜங்ஷன்கள்.—ஓரல் (Orel).

பட்டணம்.—நாவிலியா (Navilia).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—பொகெய்ன்வில்லியிலுள்ள காஹிலி (Kahili).

விமான நிலயம், ஜப்பானியச் சைனியம்.—நியூ கினியிலுள்ள லாம்பெடி (Lambeti).

விமான நிலயம்.—நியூ பிரிட்டனிலுள்ள ரபால் (Rabaul).

சிறிய துறைமுகப்பிரதேசங்கள்.—டச்சு நியூ கினியிலுள்ள காகெனு (Kaukenau).

விமான நிலயம்.—டிமோரிலுள்ள லாடென் (Lauten).

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

படகுகள்.—கலடான் நதி (Kaladan).

சேமிப்புகள்.—பர்மாவிலுள்ள முனிவா (Monywa).

எதிரித் துருப்புகள்.—பர்மாவிலுள்ள மாங்டா விற்குத் (Maungdaw) தெற்கில்.

பர்மாவிலுள்ள காலிமியோ (Kalemyo).

## பரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்

**13—7—43.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு இடம்.—வட கிழக்கு இங்கிலாந்தின் கடற்கரை (3 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

**14—7—43.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

பைல்கோராட் (Byelgorod) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன்ஸிலுள்ள ரேண்டோவா (Rendova).

நியூ கினியிலுள்ள வாவ் (Wav) பிரதேசம்.

பேனு பேனு (Bena—Bena) பிரதேசம்.

**15—7—43.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன்ஸிலுள்ள ரேண்டோவாத் (Rendova) தீவு.

**16—7—43** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

பைல்கோராட்.—(Byelgorod) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—மத்திய ஸாலமன்ஸ் (Central Solomons).

**17—7—43** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ரயில்வே ஜங்ஷன்.—ஓரல் (Orel).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

**18—7—43.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள என்கோய் (Engoi) ஜலப் பிராந்தியம்.

வேவு பார்த்தல்.—போர்ட் டார்வின் (Port Darwin). (1 ஜப்பானிய விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது).

**19—7—43.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

பைல்கோராட் (Byelgorod) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

வேவு பார்த்தல்.—சிலோன் (Ceylon). (குண்டுகள் போடப்படவில்லை).

---

# யுத்தக் குறிப்புகள்.

**ஸிஸிலி.** ஸிஸிலியைப் படையெடுக்குமுன் ஸோல்ஜர்களுக்கு ஜெனரல் மாண்ட்கோமரி ஒரு செய்தி விடுத்தார். "நாம் ஸிஸிலி யுத்தம் ஆரம்பித்துவிட்டால் உலகமெல்லாம் நம்முடைய நடவடிக்கையை ஆவலுடன் கவனித்துவரும். அவர்களுக்கு ஏராளமான சந்தோஷகரமான தகவல்களை அனுப்ப நாம் முயலவேண்டும்" என்று சொன்னார். இந்த வார்த்தைகள் தற்புகழ்ச்சியில்லை என்று ருஜுவாகிவிட்டது. ஸிஸிலியிலிருந்து ருசிகரமான தகவல் கிடைத்திருக்கிறது. ஸிஸிலியின்

பாதி பாகம் நமது வசமாகிவிட்டது. நேசதேசத் துருப்புகள் ஸிஸிலியின் மத்தியபாகப் பிரதேசத்தை அடைந்துவிட்டார்கள். மேற்குப் போர்முனையில் அக்ரிகெண்டினேவையும் ஸிஸிலியின் தலைநகரமான பாலர்மோவையும் அமெரிக்கர்கள் பிடித்துவிட்டார்கள். கிழக்குப் போர்முனையில் கடானியாவுக்கு வெளிப்பக்கத்தில் பிரிடிஷ் எட்டாம்படையும், ஜெர்மன் துருப்புகளும் கடுமையாக யுத்தம் செய்து வருகின்றன. கடானியா கூடிய சீக்கிரம் விழுந்துவிடும்.

ஏற்கனவே வீழ்ச்சிபெற்ற ஸிரக்யூஸும், அகஸ்டாவும் கிழக்குக் கடற்கரையில் ஏஜியன் கடலை நோக்கியிருக்கும் இரண்டு முக்கியமான துறைமுகங்கள். கடானியா ஒரு அழகிய செழிப்பான சமவெளியின் ஓரத்திலிருக்கிறது. இதாலியருக்குக் கிடைத்துவரும் கந்தகப் பொருளில் 90 சத விகிதம் உற்பத்தியாகும் முக்கியஸ்தானம் இதுதான்.

வி வி வி வி வி

**மகத்தான நடவடிக்கைகள்.** கிரீட்டை ஜெர்மானியர்கள் குடைகள்மூலம் தாக்கியது போல நேசதேசங்கள் ஸிஸிலியைத் தாக்கியது சாதாரண நடவடிக்கையல்ல. ஸிஸிலி நடவடிக்கையுடன் ஒப்பிட்டால் நார்விக்கிலும், டிப்பியிலும் துருப்புகள் இறங்கியது மிகவும் அல்பமானது. வட ஆபிரிக்காவில் துருப்புகள் இறங்கியது மகத்தான நடவடிக்கையாகிலும் அது திடீர் தாக்குதல் முறையிலேற்பட்டது. அதிக எதிர்ப்பில்லாததும், டார்லானைபோன்ற அநேகர் ஆதரவளித்த தேசத்தில் நடைபெற்றது. ஸிஸிலியில் படையெடுப்பு அப்பேர்ப்பட்டதல்ல. அங்கே படையெடுப்பு எந்த நிமிஷத்திலும் ஏற்படுமென்று எதிர் பார்த்து அவ்விடத்தில் எதிரி நவீன யுத்த முஸ்தீப்புகளுடன் பல மாதங்களாக நமது துருப்புகளை எதிர்க்கத் தயாராகயிருந்தான்.

வி வி வி வி வி

**ஐரோப்பிய வாசற்படி.** வழக்கப்படி ஸிஸிலிய நடவடிக்கைகளின் முக்கியத்வத்தைக் குறைத்துக்கூற எதிரி முயற்சிசெய்துவருகிருன். ஸிஸிலியில் படையெடுப்பு ஏற்பட்டதிலிருந்து ஐரோப்பிய அரங்கைத் தாக்கிவிட்டார்களென்று நினைக்கக்கூடாது. ஸிஸிலி ஐரோப்பா கண்டத்தில் ஒரு பாகமில்லையென்று அவர்கள் சொல்லிவருகிருர்கள். ஐரோப்பா கண்டத்துக்குச் செல்லும் வாசற்படிகளில் ஸிஸிலி ஒன்றென்பதை எதிரி மறந்துவிட்டான்.

வி வி வி வி வி

**இரண்டு அங்கம்** ஸிஸிலிய நடவடிக்கைகளில் இரண்டு அங்கங்களுண்டு. முதலாவது விமான மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் துருப்புகளை இறக்குவது, கடல் மார்க்கங்களையும், கடற்கரைகளையும், கேந்திரஸ்தானங்களையும் கை வசப்படுத்துவது. இவைகள் இனிது முடிந்துவிட்டன. இரண்டாவது, எதிர் பார்த்ததற்கு மேலாகவே தரைப்போர் துரிதமாக நடைபெற்று வருகிறது.

வி வி வி வி வி

**எதிரியின் குழப்பம்.** படையெடுப்பைப்பற்றி ஜெர்மனியும் இதாலியும் ரேடியோ மூலம் பலவகைப்பட்ட விவரங்களை வெளியிடுவதிலிருந்து அவர்களுக்கு உண்டாகியிருக்கும் கலக்கமும் பீதியும் புலப்படுகிறது. பெர்லின் ஒலிபரப்பில் நேசதேசக் குடைத்துருப்புகள் நிர்மூலமாகிவிட்டன. அவர்கள் துண்டிக்கப்பட்டுவிட்டார்கள். நேசதேசத் துருப்புகள் பின் வாங்குகின்றன என்று சொல்லப்படுகிறது. ரோம் ரேடியோவில் குடைத்துருப்புகள் பிரிடிஷ் அமெரிக்கத் துருப்புகளுடன் ரெகுலா என்னுமிடத்தில் சேர்ந்து கொண்டனவென்றும் நேசநாடுகள் ஸிரக்யூஸ், லிகாடா, கேலா, பாஸினே, ஆகஸ்டா முதலிய இடங்களிலுள்ள ஸ்தானங்களை விஸ்தாரப்படுத்தி வருகிருர்களென்றும் சொல்லப்படுகிறது.

வி வி வி வி வி

**ரூஸ்வெல்ட்-சர்ச்சில் செய்தி.** ஆகிலும் ஸிஸிலி படையெடுப்பின் முடிவு அச்சு நாடுகளின் புழுகைப்பொருத்ததில்லை. ஸிஸிலியின் வீழ்ச்சி நிச்சயம். முஸோலினிக்காக யுத்தம் செய்வதா அல்லது இதாலியைக் காப்பாற்றுவதா, அழிவுபடுவதா அல்லது பிழைத்திருப்பதா என்பதை யோசித்துப்பார்த்து முடிவு செய்யும் தருணம் இதாலியர்களுக்கு வந்துவிட்டது. நேசதேசப் படைகள் தங்குதடையன்னியில் முன்னேறுகின்றன. முஸோலினியும் அவனைச் சேர்ந்த பாஸிஸ்டு கோஷ்டியாரும் நாசமடையவேண்டும், அல்லது இதாலி அழியவேண்டும். கௌரவத்துடன் இதாலியர்கள் தங்கள் உயிரையும், தேசத்தையும் காப்பாற்றுவதா அல்லது அவமானத்துடன் தோல்வி பெற்று உயிரிழப்பதா என்று அவர்கள் மதித்துப்பார்க்கவேண்டும். ஜூலை 16-ம் தேதி

யன்று ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் ஒலிபரப்பில் இந்த யோசனைகளைத்தான் இதாலியர்களுக்கு விடுத்திருக்கிறார்கள். இந்தச் செய்தி இதாலிய மக்களுக்கு விடுக்கப்பட்டதே ஒழிய முஸோலினிக்கு அனுப்பப்படவில்லை. முஸோலினி ஏற்கனவே நேசதேசத்தாரின் மதிப்பை இழந்துவிட்டான். இப்பொழுது தன்னுடைய அதிகாரத்தையும் நாளடைவில் இழந்து வருகிறான். ஒலிபரப்புச் செய்தியில் வேண்டுகோளும் எச்சரிக்கையுமிருக்கிறது. இதாலியர்களை அவமானப்படுத்தும் முறையிலில்லை. பழிவாங்கும் உத்தேசமில்லாததுடன் இதாலிய மக்களைக் காப்பாற்றும் முறையில் அனுப்பப்பட்டிருக்கிறது. இதாலியர்கள் கௌரவமாக சரணடையவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் செய்தால் உலக அமைப்பில் இதாலிக்குக் கௌரவ ஸ்தானமுண்டு. இதாலியின் பிராசீன ஸ்வதந்திரம், கலைஞானம் முதலிய ஞானமார்க்கத்தையும், ஜெர்மனியால் கைவிடப்பட்டு பிறர் கையில் காட்டிக்கொடுக்கப்பட்ட போதிலும் இதாலியத் துருப்புகள் வீரத்துடன் யுத்தம் செய்தார்கள் என்பதையும் அந்தச் செய்தியில் அவ்விருவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதாலியைப் படையெடுத்து அங்கே யுத்தத்தின் கொடுமைகளை இழைத்துவிடவேண்டுமென்று நேச நாடுகள் விரும்பவில்லை.

ரோம் ரேடியோ மூலம் உத்தியோகமுறையில் இதற்கு பதிலளிக்கப்பட்டது. இந்த யுத்தம் முடிவானதாக யிருந்தபோதிலும் நாங்கள் சரணடையமாட்டோமென்று இதாலி சொல்லிவிட்டது.

ரேடியோவில் பேசியவர் யுத்தம் முடிவடைய வேண்டுமென்று மனதார விரும்பும் ஜனங்களின் அபிப்பிராயத்தை வெளியிடவில்லை. இதாலியின் முடிவு வந்துவிட்டதென்றும், துர்தசை ஆரம்பித்துவிட்டதென்றும், பிரான்ஸையும், அல்பேனியாவையும் கிரீஸையும் அயோக்யத்தனமாகத் தாக்கியதற்குச் சிக்ஷை ஏற்பட்டுவிட்டதென்றும் அவர்கள் அறிந்துவிட்டார்கள். ஒலிபரப்பில் விடுத்த பதில் பாஸிஸ்டு கக்ஷியின் காரியதரிசியான கார்லோ ஸ்கோர்ஸாவின் அபிப்பிராயம். அவர் ஜூலை 18-ம் தேதயன்று பின்வருமாறு ஒலிபரப்பில் பேசினார்.

"தீரமாக எதிர்த்து நில்லுங்கள். இது தான் நான் இதாலியர்களுக்கு விடுக்கும் உத்தரவு. இந்தக் கடமையை நீங்கள் செய்யாமல் போனால் இதாலியின் புகழ்கெட்டுவிடும்.

"இதாலியின் வெகுகாலமுள்ள சரித்திரத்திலேயே இப்பொழுதுதான் இதாலிக்கு அபாயம் உண்டாகியிருக்கிறது. பணக்காரர்களும் தீரர்களுமான இரண்டு சாம்ராஜ்யங்கள் நம்மைத்தாக்கி வருகின்றன. நம்முடைய தேசத்தையும் ராஜீய முறைகளையும் அழிக்க அவர்கள் முற்பட்டிருக்கிறார்கள்."

ஆனால் இதாலிய மக்களின் அந்தரங்க அபிப்பிராயம் வேறு விதமாகயிருக்கிறது. ஒரு ஸிஸிலிய நகரம் விடுதலை பெற்றதைப்பற்றி ராய்டர் பின்கண்ட விவரம் கொடுத்திருக்கிறார்.

"பாஸிஸத்திலிருந்து ஒரு நகரம் விடுதலை பெற்றது.

நேசதேசத் துருப்புகளுக்கு பலமான வரவேற்பு.

ராஜீயக் கைதிகள் விடுதலை பெற்றார்கள்—ஸிஸிலி—ஜூலை 18.

"இன்றுதான் அச்சுநாட்டாரின் ஆதிக்கத்துக்குட்பட்ட நகரத்தை விடுதலை செய்த சந்தோஷத்தை நமது படைகள் அனுபவித்தன. எட்டாம் படை ராஜீய உணர்ச்சியில்லாததும், சோம்பேறிகளும் அதிகப்படிப்பில்லாதவர்களுமுள்ள பிராந்தியங்களைத் தாண்டிச் சென்றிருக்கிறது. ஆகிலும் இன்று பிற்பகலில் ஒரு சிறிய நகரம் 8-ம் படையை வரவேற்றதுடன் குதூகலமாகயிருந்தது. ஐரோப்பாவில் நேசதேசப் படையினர் இறங்கியவுடன் இப்பேர்ப்பட்ட வரவேற்பு நடைபெறுவதற்கு இது முற்போக்கானது. குழந்தைகள் முதல் விருத்தர்கள் உள்பட எல்லோரும் தெரு ஓரங்களில் நின்றுகொண்டு, கரகோஷம் செய்தார்கள், குதூகலப்பட்டார்கள், சிரித்தார்கள். கடானியாவை நோக்கிப் பின்வாங்கிவரும் ஜெர்மானியர்களைத் துரத்திக்கொண்டு பிரிடிஷ்காரர்கள் சென்றபொழுது கைக்குட்டைகளை வீசி நல்வரவு கூறினார்கள்.

"வரவேற்பு டம்பமாக நடை பெறவில்லை. பேடிஜமாக ஜனங்கள் குதூகலமடையவில்லை. ஜனங்கள் ஆநந்தக் கண்ணீர்விட்டு ஆங்கிலேயர்கள் நீடூழி வாழ்க என்று உரக்கக் கூக்குரலிட்டார்கள். வரவேற்பைக் கண்டு முன்னேறும் துருப்புகள் வியப்புற்றன. கிரேக்க கிராமத்திலும், டச்சு நகரத்திலும், மற்ற ஆக்கிரமிப்பு ஐரோப்பாவில் எந்த இடத்திலும் இவ்விதமான குதூகலமும் கூக்குரலும் ஏற்படாது. எங்களுடைய மோட்டார் மெதுவாகச் சென்றபொழுது ஒரு ஸிஸிலியர் காரின் படியில் ஏறி நின்று 'ஜெர்மானியர்களை அழித்துவிடுங்கள்' என்று உரக்க இதாலிய பாஷையில் கத்தினான்.

"மோட்டார் நின்றபொழுது ஜனங்கள் திரண்டு வந்து மோட்டாரைச்சுற்றிக்கொண்டார்கள். சாதாரணமாக பிரயாணிகள் செல்லக்கூடிய ஒரு காரின் பலகணி வழியாக ஏராளமான ஜனங்கள் எட்டிப்பார்த்தார்கள். கைகளை நீட்டி வரவேற்றார்கள். அநேக நிமிஷங்கள் வரை நாங்கள் மூவரும் எல்லா திசைகளிலும் கை குலுக்கினோம். சிலர் எங்களை முதுகில் தட்டிக்கொடுத்தார்கள். ஜனங்கள் சந்தோஷப் பெருக்கினால் கூச்சலிட ஆரம்பித்தார்கள்.

## கைதிகள் விடுதலை.

"பிறகு புதிய மாதிரியில் சப்தம் உண்டாகிற்று. சிறிப்பு ஓய்ந்தது. அடையாளம் காட்டிப் பேசும் முறை அதிகரித்தது. வெகு சிரமப்பட்டு அவர்கள் தங்களைச்சேர்ந்த கைதிகளை விடுவிக்கவேண்டுமென்று பிரியப்படுகிறார்களென்று அறிந்தோம். முதலில் அடைப்பட்டிருக்கும் பிரிடிஷ் கைதிகளைக் குறிப்பிடுகிறார்களென்று நினைத்தோம். அவர்கள் ஸிஸிலியர்களைத்தான் சுட்டிக்காட்டினார்கள். ஐரோப்பாவில் ராஜீயக்கொள்கைகளுக்காக சிறையிலடைப்பட்டவர்களை முதல் முதலில் விடுதலை செய்யும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது. ஜனங்கள் எங்களை பயங்கரமான தோற்றமுள்ள ஒரு கட்டடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்த காவல்காரன் எங்களைக்கண்டு கதவுகளைத் திறந்துவிட்டான். உள்ளே சிறிய அறைகளில் நெருக்கடியாக அடைக்கப்பட்டிருந்த 30 பேர்களிருந்தார்கள். 18 முதல் 60 வயதுள்ளவர்களாகயிருந்தார்கள். இந்தக் கோரமான நிலைமையில் அவர்கள் அநேக மாதங்களாகச் சிறைப்பட்டிருந்தார்கள். விடுதலை பெற்றதும் அவர்கள் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. ஒவ்வொருவரையும் சுற்றத்தார்கள் தழுவிக்கட்டிக்கொண்டார்கள். ராஜீயக் கைதிகள் என்று சொல்லப்பட்டாலும் அவர்களைப் பசிப்பிணிக்காக கலகம் செய்தவர்களென்று சொல்லலாம். கட்டடத்திலிருந்தவர்களெல்லாம் பசிப்பிணி என்று அடிக்கடி கத்தினார்கள். அவ்வழியே சென்ற ஒரு டாங்கிலிருந்து மிட்டாய்களை ஏராளமாகத் தள்ளினோம். வண்டியிலிருந்த சுருட்டுகளெல்லாம் காலி செய்யப்பட்டன. ஒரு அழகிய வாலிபமுள்ள பெண் காரின் பலகணி வழியாகக் கையை நீட்டி ஒரு ஆபீஸரின் கழுத்தைக்கட்டிக்கொண்டு அவனைக் கன்னத்தில் முத்தமிட்டாள். அந்த நகரம் புத்துயிர் பெற்று விட்டதென்று சொல்லுவதற்கில்லை. 20 வருஷங்களாக பாஸித்வம் ஊறிக்கிடக்கும் ஒரு நகரத்தை ஒரு நாளில் திருத்தியமைப்பதென்பது முடியாதகாரியம். ஒவ்வொரு கைதியும் வெளியே வந்தபொழுது அவனுக்கு நான்கு ஸ்வதந்திரங்களில் ஒன்று கிட்டிவிட்டது. பேச்சுரிமை நிச்சயமாக அவனுக்குக் கிடைத்துவிட்டது."

வி வி வி வி வி

**கார்லோ ஸ்கோர்ஸா.** டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கையில் பின்கண்ட விவரணம் எழுதப்பட்டிருக்கிறது. "நிலை குலைந்துவிட்ட முஸோலினிக்குப் பதிலாக ராஜீய கொள்ளைக்காரர்களின் அமுல் வந்துவிட்டது. பாஸிஸ்டு கக்ஷியின் காரியதரிசியும், பாஸிதத்வம் ததும்பும் கார்லோ ஸ்கோர்ஸா ருஷ்யாவின் ஸாரைப்போல, இதாலியப் போர்முனையின் அதிகாரியாக முன்வந்துவிட்டான்.

"முஸோலினி அதிகாரத்துக்கு வருவதற்கு உதவி செய்தவர்களும் அவனிடமிருந்து வெகுமதிகள் பெற்றவர்களும் தன்னைக் கைவிட்டு விடாதபடி முஸோலினி பார்த்து வருகிறான். பாஸிஸத்துக்கு, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அபாயமேற்பட்டிருக்கிறது. ஆகையால் நிர்வாகத்தை நடத்துவதற்கு முரட்டு ஸ்வபாவமும், தயையின்மையும், தைரியமும் உள்ளவர்கள் தேவை. இந்த வேலைக்கு ஸ்கோர்ஸாதான் சரியான மனிதன். கொள்ளைக்காரர்களின் நடவடிக்கைகளில் நிபுணனாதலால் அவனைக் கொலையாளி என்றும், இயற்கையாகவே பீஷண சத்தியுள்ளவனென்றும் கொடுந்துன்பம் விளைவிப்பதில் தாபமில்லாதவனென்றும் சொல்லுகிறார்கள்".

வி வி வி வி வி

**ஆம்காட்.** ஜெனரல் ஸர் ஹாரோல்ட் அலெக்ஸாண்டர் கவர்னராக உள்ள ஒரு தனிப்பட்ட நிர்வாகம் ஸிஸிலியில் அமைக்கப்பட்டுவிட்டது. இந்த அரசாங்கத்துக்கு ஆம்காட் என்று சுருக்கமான பெயர். அதாவது ஆக்கிரமிப்பு நாடுகளில் நேசதேசத்தாரின் ராணுவ நிர்வாகம் என்று பொருள்படும். இந்த ராணுவ நிர்வாகத்தில் ராஜீய விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா. இதை வாஷிங்டனிலுள்ள மூவகைப்பட்ட படைகளின் தலைவர்களும் ஜெனரல் ஈசன்ஹவர் மூலமாக நடத்திவருவார்கள். அச்சுநாடுகளின் ஆக்கிரமணத்துக்குட்பட்ட நாடுகள் விடுதலை பெறும்பொழுது நேசநாடுகள் அமைக்கப்போகும் அரசாங்கங்களுக்கு இது அடையாளம் காட்டக்கூடியது. இந்த நிர்வாகத்திற்கு பர்மாவிலிருந்தும் காலிபோர்னியாவிலிருந்தும் பிரிடிஷ் அமெரிக்க அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

ராணுவ கவர்னர் என்ற முறையில் ஜெனரல் அலெக்ஸாண்டர், ஸிஸிலியிலுள்ள எல்லா பாஸிஸ்டு கக்ஷி ஸ்தாபனங்களையும் கலைத்துவிட்டதாகவும் பக்ஷபாதமான சட்டதிட்டங்களை ரத்துசெய்துவிட்டதாகவும் ஜனங்களின் சொத்து ஸ்வதந்திரங்களைக் காப்பாற்றுவதாகவும் ஒரு விளம்பரம் செய்துவிட்டார்.

வி வி வி வி வி

**யுத்தப்போக்கு மாறிவிட்டது.** ருஷ்யச்சேனை ஜெர்மன் சேனையை முறியடிக்க ஆரம்பித்து விட்டது. ஜூலை மாதம் 5-ம் தேதியன்று ஜெர்மானியர்கள் ஓரல், குர்ஸக், பெயலோகிராட் என்ற மூன்று பகுதிகளில் தாக்க ஆரம்பித்தார்கள். தங்களுடைய மத்திய ஸ்தானத்துக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய குர்ஸக் என்னுமிடத்திலுள்ள ருஷ்ய முன்னணி ஸ்தலத்தைப் பிடிப்பதற்காகத்தான் ஜெர்மானியர்கள் தாக்கினார்கள். இந்த முயற்சி பலிக்காமல் போனபின் அவர்கள் மறுபடியும் தற்காப்பு யுத்தத்திலிறங்கி விட்டார்கள். அதற்கு 10 நாட்களுக்குப்பின் ருஷ்யர்கள் முன்னேறித்தாக்க ஆரம்பித்து விட்டார்கள். சென்ற வருஷம் வார்னேஷிலும், ஸ்டாலின்கிராட்டுக்குச் சமீபத்திலுள்ள டான் நதிப்பிரதேசத்திலும் ஊடுருவியதுபோல ருஷ்யர்கள் ஓரலுக்கு வடக்கேயும், தெற்கேயும் முன்னேறிவிட்டார்கள். 10 நாட்கள் நடைபெற்ற யுத்தத்தில் வான்குளுக் என்னும் ஜெர்மன் தளகர்த்தர் 60,000 மனிதர்களையும் நூற்றுக்கணக்கான டாங்கிகளையும் விமானங்களையும் இழந்துவிட்டார். ஜெர்மானியர்கள் சிறிது முன்னேறியிருந்த பெயலோகிராடுக்குப் போகும் பிரதேசத்திலும் ருஷ்யர்கள் முன்னேறி தற்காப்புகளைப் பலப்படுத்திவிட்டார்கள். இவ்விதமாக குர்ஸக் முன்னணி ஸ்தலத்துக்காக நடைபெற்ற சண்டையில் எதிரிக்குத் தோல்வி கிடைத்துவிட்டது. நிலைமை மேலும் மோசமாகிவருகிறது. கடைசியாக வந்த செய்திகளில் ருஷ்யப்படைகள் மியூஸ் டானெட்ஸ் பகுதியிலும் கூபான் பகுதியிலும் முன்னேறித்தாக்க ஆரம்பித்துவிட்டார்களென்று தெரியவருகிறது.

வி வி வி வி வி

**பூரிடனின் கழுதை.** ஹிட்லரின் ஸ்திதியை இரண்டு வைக்கோல் போர்களுக்கும் நடுமத்தியில் கட்டப்பட்ட ஒரு கழுதையின் நிலைமைக்கு ஒப்பிடலாம். எந்த வைக்கோலை முதலில் சாப்பிடுகிறதென்று தீர்மானம் செய்ய முடியாமல் அந்தக்கழுதை வறுமையினால் உயிர் துறந்ததாம். ருஷ்யாவிலும், ஸிஸிலியிலும் யுத்தம் துவங்கிவிட்டதால் ஹிட்லர் எதிர்க்க ஆசையுள்ளவனாகயிருக்கிறான். ஆனால் நடவடிக்கையை ஆரம்பிக்க பயப்படுகிறான். ஏப்ரல் மாதம் பூராவிலும் ஹிட்லர் எந்த இடத்தில் வேண்டுமென்றாலும் தாக்க ஸ்வதந்திரம் பெற்றிருந்தான். எந்த இடத்தில் தாக்குவதென்று தீர்மானம் செய்ய அவனுக்கு ஈச்வரானுக்ரஹம் ஏற்படும் சமயத்தை அவன் எதிர்பார்த்திருந்தான். அவன் தீர்மானம் செய்தாலும், செய்யாவிட்டாலும் தெய்வம் உத்தரவு கொடுக்கவில்லை. அதன்பின் பேச்சுமாற்றம் உண்டாகிற்று. நாங்கள் முன்னேறுவதாக உத்தேசமில்லையென்றும், ஸிஸிலியில் படையெடுப்பு ஏற்படும்பொழுது முன்னேறித்தாக்குவதாக ருஷ்யர்கள் உத்தேசித்திருக்கிறார்களென்றும் சொல்லப்பட்டது. ஆகிலும், ஜூலை 5-ம்தேதியன்று ஜெர்மானியர்கள்தான் முதலில் குர்ஸக்கில் தாக்க ஆரம்பித்தார்கள். முயற்சி வீணானவுடன் ருஷ்ய முன்னேற்றத்தை வெற்றிகரமாகத் தடுத்துவிட்டோமென்று இப்பொழுது புகழ்சொல்லிவருகிறார்கள். தோல்விகளைக்கண்டு ஹிட்லர் நடுநடுங்கி இவ்விதமாகப் பிதற்ற ஆரம்பித்துவிட்டான். ருஷ்யத் தாக்குதலினின்றும் தன்னைக்காப்பாற்றிக் கொள்ளுவதுடன் ஜெர்மானியர்களின் குற்றச்சாட்டுகளிலிருந்தும் அவன் தன்னை மீட்டுக் கொள்ளவேண்டும். ருஷ்ய முன்னேற்றத்தை அவன் வெற்றிகரமாகத் தடைசெய்து விட்டால் "நாங்கள் முன்னேறுவதாக உத்தேசிக்கவில்லை. ருஷ்யர்களைத் தடுப்பதற்காகத் தான் காத்திருந்தோம்" என்று அவன் சொல்லிக்கொள்ளலாம்.

வி வி வி வி வி

**ஜெர்மன் பிரசாரத்தில் மாறுதல்.** ஸிஸிலியில் படையெடுப்பு ஏற்பட்டபின் ஐரோப்பியக் கோட்டை பிளக்கமுடியாதது என்ற பிரசாரப் பேச்சு மறைந்துவிட்டது. நேசநாடுகளிடம் துருப்புகளை ஏற்றிச்செல்லுவதற்கு ஏராளமான கப்பல்களும் அரண்களைப் பிளந்துவிடுவதற்குப் போதுமான படை பலமுமிருக்கிறதென்று ஜெர்மனி ஒப்புக்கொள்ளுகிறது. டாக்டர் கோயபல்ஸூம்கூட சில சந்தர்ப்பங்களில் பிரிடிஷ் அமெரிக்கப் படையெடுப்பு முயற்சி யுத்தத்தின் முடிவுக்குச் சாதகமளிக்கக்கூடுமென்றும் ஒப்புக்கொள்ளுகிறான். ஆகையால் பிரசாரத்தின் தோரணை வேறுவிதமாக மாறிவிட்டது. ஐரோப்பாவிலுள்ள கடற்கரை அரண் பிளவுபடலாம். ஆனால் ஜெர்மனி ஸெகோஸ்லாவோகியா, போலந்து முதலியஇடங்களைச் சுற்றியுள்ள சுரங்கவெடிகளும், முள்ளுக்கம்பி, வேலிகளுமுள்ள உள்நாட்டு அரண் பலமாக நிற்குமாம். பால்கன் நாடுகள், இதாலி, பிரான்ஸ், ஹாலந்து, டென்மார்க், நார்வே முதலிய இடங்களின் கதியைப்பற்றி ஒரு பேச்சையும் காணோம். கடற்கரை அரண்கள் நொருக்கப்பட்டபின் ஜெர்மனி மற்றொரு பாண்டலேரியாபோல தகர்க்கப்படலாம்.

**கோரமான நிகழ்ச்சிகள்.** ஜெர்மானியர்களுக்கு உணர்ச்சியை உண்டாக்குவதற்காக ஒரு புதிய வேண்டுகோள் செய்யப்பட்டிருக்கிறது. ஜெர்மனியை எப்பாடுபட்டும் காப்பாற்றிவிடவேண்டும். அநாகரீகமற்ற நாடுகளின் மத்தியில் ஐரோப்பாவின் கலை ஞானத்துக்கு ஜெர்மனி திலகம்போலிருக்கிறது. கலை ஞானமும் நாகரீகமும் ஜெர்மனியில் ஓங்கி நிற்கின்றது. அப்பேர்ப்பட்ட தேசத்தை பிரிடிஷாரும் அமெரிக்கர்களும் அழித்துவிடத் துணிந்துவிட்டார்கள் என்று ஜெர்மானியர்கள் புலம்ப ஆரம்பித்துவிட்டார்கள். ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கும் துர்தசைக்கு, வார்ஸாவையும் ராட்டர்டாமையும் நொருக்கியதும், "இங்கிலாந்தின் நாசத்துக்கு தெய்வானுகூலமுண்டாகட்டும். ஜெர்மன் மக்களுக்கு இதைத்தான் தெய்வம் கட்டளையிட்டிருக்கிறது என்று" 1940-ம் வருஷம் நவம்பர்மாதம் 22-ம் தேதியன்று நாஸிகள் பிதற்றியதும்தான் காரணங்களாகும்.

வி வி வி வி வி

**நேசதேச பலம்.** ஸோவியத் யுத்தச் செய்தி பேபரிலிருந்து எடுத்து இந்திய நியூஸ் லெட்டர் பிரசுரத்தின் 1943-ம் வருஷம் ஜூலை மாதம் 17-ம் தேதியுள்ள பதிப்பில் அச்சிடப்பட்டிருக்கும் நேசதேச படைபலத்தின் வலிமையை இங்கு பிரசுரிக்கிறோம்.

**தரைப்படை.**—பிரிடிஷ் சாம்ராஜ்யம். ஐரோப்பிய போர்முனையில் $2\frac{1}{2}$ அல்லது 3 மிலியன்கள். அமெரிக்கா $1\frac{1}{2}$ மிலியன் அல்லது 2 மிலியன். பிரான்ஸு 5 லக்ஷம்.

**டாங்கிகள்.**—மாதாந்திர உற்பத்தி. பிரிடன் 2,000. கனடா 500. அமெரிக்கா 3,000. ஜெர்மனியும் அதைச்சேர்ந்த நாடுகளும் 3,000.

**பீரங்கிகள்.**—மாதாந்திர உற்பத்தி. பிரிடன் 3,000. கனடா 1,000. அமெரிக்கா 3000. எதிரிகள் 4,000.

**விமானங்கள்.**—மாதாந்திர உற்பத்தி. பிரிடன், கனடா, அமெரிக்கா 10,000 முதல் 11,000. எதிரி 4,000.

**கப்பல்கள்.**—மாதாந்திர உற்பத்தி. பிரிடன், கனடா, 3 மிலியன், அல்லது $3\frac{1}{2}$ மிலியன் டன்கள். அமெரிக்கா 8 மிலியன் டன்கள் (அமெரிக்கா சம்பந்தப்பட்டமட்டில் சென்ற வருஷத்திய கணக்கு குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வருஷத்தில் உற்பத்தி மாதம் ஒன்றுக்கு 10,00,800 டன்கள் வீதம் அதிகரித்துவருகிறது).

வி வி வி வி வி வி

**பஸிபிக் யுத்தம்.** பஸிபிக் சமுத்திரத்தில் நேசதேசத்தாரின் யுத்த தந்திரத்தைப்பற்றி ஜெர்மனியும், டோக்கியோவும் பேசும்பொழுது இது தீவு தீவாகத் தாவும் முறையாகயிருக்கிறது என்றும் இதிலிருந்து ஒரு லாபமும் அவர்களுக்குக் கிடைக்கவில்லையென்றும் சொல்லுகிறார்கள். ஜப்பானியரின் நோக்கங்களும் லாபங்களுமென்ன என்று பார்ப்போம். பஸிபிக் தீவுகளின் ஸ்தல அமைப்பின் நிலைமையில் சிறப்பான நடவடிக்கைகள் ஒன்றும் நடைபெறமுடியாது. முண்டாவுக்கும், ஸாலமூவாவுக்கும் சமீபத்தில் நடைபெறும் நிலப்போர் மார்க்கங்களில்லாத அடர்ந்த காடுகளில் நடைபெற்று வருகிறது. தாங்கள் முன்னேறுவதைவிட எதிரிகளை முன்னேறவொட்டாமல் தடுத்துவிடுவதுதான் நேசநாடுகளின் நோக்கம். சென்ற சில மாதங்களில் நடைபெற்ற நடவடிக்கைகளின் விளைவுகளைப் பரிசிலனை செய்தால் நேசநாடுகள் சாவதானமாக வெற்றி பெற்று வருகிறார்களென்பது தெளிவாகுகிறது. வட பஸிபிக்கில் அலூஷியன் தீவுகளிலிருந்து எதிரி துரத்தியடிக்கப்படுகிறான். அலூஷியன் தீவுகளில் ஊன்றிக்கொண்டு அமெரிக்காவுக்குச் செல்லுவதற்கு தரை மார்க்கமாகவும், விமான மார்க்கமாகவும் போக்குவரவு வசதிகளை ஏற்படுத்த ஜப்பான் முயன்றது. மத்திய பஸிபிக்கில் ஹவாயத் தீவுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய மிட்வே தீவிலிருந்தும் எதிரி விரட்டியடிக்கப்பட்டான். தெற்கு பஸிபிக்கில் டார்ரஸ் ஜலசந்தியானது எதிரியின் பூண்டில்லாமல் சுத்திசெய்யப்பட்டுவிட்டது. ஆஸ்திரேலியாவுக்குப்போகும் மார்க்கம் அடைபட்டுவிட்டது. மேலும் ஆஸ்திரேலியா முக்கிய தளமாக மாறிவிட்டது. ஸாலமன்ஸிலும், நியூகினியாவிலும் நமக்குக்கிடைத்த வெற்றிகள்மூலம் ஜப்பானிய ஸ்தானங்கள் பிளவுபட்டதுடன் கடலில் யுத்தம் செய்யவேண்டிய நிலைமையும் எதிரிக்கு ஏற்பட்டுவிட்டது. தீவுகள் சண்டையில் ஜப்பானியப் படைகள் ஏராளமாக ஈடுபட்டிருப்பதால் சீனாவில் நடைபெறும் யுத்தத்திற்கு இங்கிருந்து துருப்புகளை ஜப்பான் அனுப்ப முடியவில்லை.

ஐரோப்பிய யுத்தத்துக்கும் தீவுகளில் நடைபெறும் யுத்தத்துக்கும் வித்தியாசமுண்டு. ருஷ்யா யுத்தம் பூராவும் தரையில் நடைபெறுகிறது. வட ஆபிரிக்கா யுத்தம் தரையிலும் பக்கத்தில் கடலிலும் நடைபெற்றது. பஸிபிக் யுத்தத்தில் கடல் தரைப் பிராந்தியங்களில் ஊடுருவிச் செல்லுகிறது. கடலே ஒரு யுத்த பிராந்தியம். பெரும்பாலும் விமான யுத்தம் என்றே சொல்லலாம். ஆகிலும் கடல் மார்க்கங்களை விமானங்கள் மட்டும் காப்பாற்றிவிட முடியாது. குறுகலான கடல் மார்க்கங்களில் யுத்தக் கப்பல்களும் நடமாடமுடியாது. தற்காப்பில்லாத ஒரு தீவு சுலபமாக நமது வசமாகிவிடும். ஆனால் அதை ரக்ஷிப்பதற்கு கப்பல் பலம் அவசியம். ஜப்பானியர்களிடம் பலமான கடற்படையிருக்கிறது. இதை உபயோகப்படுத்த அவர்கள் பயப்படுகிறார்கள். இவ்விதமாக அவர்கள் தயங்கினால் நேச தேசங்கள் தீவுக்குப் பின் தீவாகத் தாண்டிவிடுவார்கள். கப்பற்படை வெளிவந்தால் மற்றொரு டாரெண்டோ நிகழ்ச்சி ஏற்படக்கூடும்.

பஸிபிக் கடல் யுத்தத்துக்கு கடலாதிக்கம்தான் முக்கியமானது. ஜப்பானியர்களுக்கு ஏராளமான மனித நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. தற்கொலை செய்துகொள்வதில் ஊக்கமுள்ள ஒரு தேசம் இந்த நஷ்டத்தைப் பொருட்படுத்தாது. ஆனால் கப்பல்கள், விமானங்கள் இவைகளின் ஏராளமான நஷ்டத்தை புரக்கணித்துவிட முடியாது.

வி வி வி வி வி

**மார்டினிக் தீவு.** விஷி ஸர்க்காரைச் சேர்ந்த கவர்னரான கடற்தளபதி ராபர்ட்ஸ் ராஜினாமா செய்துவிட்டார். போர்ட் டி பிரான்ஸிலுள்ள துருப்புகள் கலகம் செய்ததினாலும், தெருக்களில் ஜனங்கள் ஆரவாரம் செய்ய ஆரம்பித்ததாலும் அவர் இணங்கும்படி ஆகிவிட்டது. 40 மிலியன் டாலர் உள்ள தங்கத்தை அவர் சேமித்து வைத்திருந்தார். இந்தப் பொருளை பிரெஞ்சு தேசீய விடுதலைக் கமிட்டி கைப்பற்றிவிடும். அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டிருக்கும் ஹென்ரி ஹாப்பனாட் என்பவர் வாஷிங்டனுக்குச் சென்றிருக்கும் பிரெஞ்சு ராணுவ கோஷ்டியின் அங்கத்தினர். இந்தப் புதிய நிர்வாகம் தங்களிடமுள்ள எல்லா ஐஸ்வரியங்களையும் கப்பல்களையும் நேசநாடுகளின் உபயோகத்துக்குக் கொடுத்துவிடுவதாக வாக்களித்துவிட்டது.

வி வி வி வி வி

**யுத்தக் கடன்.** யுத்தக் கடன் பத்திரங்களில் ஜனங்களிடமுள்ள சேமிப்புத் தொகைகளைப் போடுமாறு அரசாங்கத்தார் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். விலைவாசி உயர்வைப்பற்றியும், சாமான்களின் குறைவைப் பற்றியும், காகித நோட்டுகளின் சிலாவணியைப்பற்றியும், சாகச வியாபாரத்தையும், அநியாய லாபம் சம்பாதிப்பதைப்பற்றியும் விரிவாக எடுத்துப்பேசப் போவதில்லை. இந்தியாவின் யுத்தத்துக்காகவும், இந்தியாவின் க்ஷேமத்துக்காகவும் இந்தியர்கள் பொருளுதவேண்டுமென்று சுருக்கமாகச் சொல்லுகிறோம். பொருளை தானமாகக் கொடுப்பதற்குப் பதிலாக பத்திரமாகப் போட்டுவைக்கும் முறை ஏற்பாடாகியிருக்கிறது. யுத்தக் கடன் என்பது வரி விகிதமில்லை, தானமில்லை. ஆனால் கடன் கொடுப்பது, வட்டியும் முதலுமாக சில காலம் கழித்து நமக்கு திரும்பிவரக்கூடியது.

இந்தப் பத்திரங்களை வாங்குகிறவர்கள் பணக்காரர்களாகயிருக்கவேண்டுமென்பதில்லை. நடுநிலைமை வகிக்கும் குடும்பங்கள் அநேகம் பொருள் சேமித்து வைத்திருக்கிறார்கள். அவைகளை யுத்தக் கடன் பத்திரங்களில் போடுவதுதான் பத்திரமான முதலீடு. கருமித்தனமாகயில்லாமல் சிறிது சிக்கனம் செய்து வந்தால் பொருள் சேமித்துவிடலாம். விருந்துகளிலும், உற்சவங்களிலும் அதிகப் பணம் செலவழிக்கவேண்டியதில்லை. ஆடைகளிலும் உணவுப் பொருள்களிலும் சிக்கன முறையை அனுஷ்டிப்பது நலம். ஒரு அணா மீதப்படுத்தினால் ஒரு அணா லாபம் கிடைத்தது போலாகும். வெற்றிக்காக ஒரு தோட்டா செய்தது போலாகும்.

---

# கடல்படை பலம் ஹிட்லரின் அரணைத் துளைத்துவிட்டது. படையெடுப்புக்கு ஆதரவளித்தது.

(**A. J. மாக்வின்னி**).

ஸிஸிலியில் ஏற்பட்ட படையெடுப்பானது ஹிட்லர் கட்டியிருப்பதாகச் சொல்லப்படும் அரண்களை நேசதேச கடற்படை எவ்விதத்தில் நொருக்கிவிடக் கூடுமென்பதற்கு அத்தாக்ஷியாகும். கடற்கறை பீரங்கிகளும், சுரங்க வெடிகளும், இதர தற்காப்பு முறைகளும் படை எடுக்கும் துருப்புகளை இறங்கவொட்டாமல் தடுக்க இயலாது என்பதை அச்சுநாடுகள் இப்பொழுது அறிந்துவிட்டார்கள்.

ஐரோப்பாவைச் சுற்றிலும் இரும்புவளையம் அமைக்கப்பட்டுவிட்டதென்று நினைத்ததெல்லாம் உபயோகமற்றதென்றும் அவர்கள் அறிந்துவிட்டார்கள். அடுத்தபடியாக எந்த இடத்தில் தாக்குதல் ஏற்படுமென்று அவர்களுக்கு இன்னும் புலப்படவில்லை. ஸிஸிலியில் படையெடுப்பு எதிர்பாராதபடி திடீரென்று ஏற்பட்டுவிட்டது. ஆனால் இது நடைபெறுவதற்கு கடற்படையின் சாவதானமான தீவிரமான நடவடிக்கைதான் காரணமானது. கடற்படைக்கு ஆகாயத்திலும் பலமான விமானப்படையின் உதவி வேண்டுமென்பது ஒரு தத்வம். அது போல யுத்தக் கப்பல்களுக்கு ரக்ஷணையாக லேசான கப்பல் பலமும், தரைப் படைகளுக்கு விமானப்படை, டாங்குகள், பீரங்கிகளின் உதவியும் அவசியமாகும்.

உலகத்திலேயே மிகப்பெரிய கடற்படையுள்ள இருதேசங்களின் கடற்படை பலத்தினால் தான் ஏராளமான முஸ்தீப்புகளுடனும் சாமான்களுடனும் துருப்புகள் ஸிஸிலியில் இறங்க வசதியேற்பட்டது. பிரிடனும் அமெரிக்காவும் இதாலிய ஏரி என்று முஸோலினி சொல்லி வந்த மத்தியதரைக்கடலில் கடலாதிக்கம் பெற்றுவிட்டார்கள்.

படையெடுப்பு நடைபெருவதற்கு நேசநாடுகள் வெகுகாலமாகத் தயார் செய்திருக்கிறார்கள். இன்னமும் அவர்கள் சிரமப்படத்தான் வேண்டும். வருங்கால யுத்தப்போக்கைப் பற்றி குதூகலமாக பேசுவது சாவதானமில்லை. தங்களுடைய உயிரைக்காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால் யதேச்சாதிகாரிகள் அவசியம் ஏற்பட்டாலொழிய யுத்தத்தை நிறுத்திவிட மாட்டார்கள்.

### ஈக்கள் போல் குவிந்தன.

இந்த மகத்தான படையெடுப்பில் பெரியதும் சிறியதுமான 2,000 கப்பல்கள் ஈடுப்பட்டன. ஆகாயத்திலிருந்து கவனித்தபொழுது கப்பல்கள் ஈக்களின் கூட்டம் போல் தோன்றிற்று. அச்சுநாட்டினரின் கப்பற்படையும் விமானப்படையும் இவைகளின் முன்னேற்றத்தைத் தாக்கமுடியவில்லை.

பிரிடிஷ் சுரங்கவாரிக் கப்பல்கள் முன் சென்று இதாலியக் கடல்களிலுள்ள சுரங்க வெடிகளை அகற்றின. கடற்கரையிலுள்ள பீரங்கிகள் நேசதேச விமானங்களாலும் கப்பல்களிலுள்ள பீரங்கிகளாலும் நொருக்கப்பட்டன. இதுவரையிலில்லாத மகத்தான கப்பல் கூட்டத்தைக் காப்பாற்றிவந்த விமானங்களை அச்சுவிமானங்கள் விரட்டியடிக்க முடியவில்லை.

படையெடுப்பு காலத்தில் அச்சுநாட்டுப் படைகள் சுறுசுறுப்பாக வேலைசெய்யவேண்டாமென்று உத்தரவிட்டதிலிருந்து அச்சுநாடுகளுக்கு எவ்விதமான பீதி ஏற்பட்டிருக்கிறதென்று நீங்கள் தெரிந்துகொள்ளலாம். ஜெர்மானிய இதாலிய கடற்படைகளில் பிளவு ஏற்பட்டுவிட்டதென்று நான் யோசனை கூறவில்லை. கடற்படையின் மனப்பான்மை குறைந்துவிடாமல் வலுவாகயிருந்ததென்று வைத்துக்கொண்டால், படையெடுக்கும் கடற்படையைத் தாக்க அவர்களுக்கு உத்திரவு அளிக்கப் படவில்லையென்பதில் அச்சுநாட்டு மாலுமிகள் அதிகமாக அதிருப்தியடைவரர்களென்றுதான் சொல்லவேண்டும்.

ஆகையால், சிறிய ஆனால் சக்தி வாய்ந்த ஜெர்மன் கடற்படையும், பெரியதும் அபார சக்தி வாய்ந்ததுமான இதாலிய கடற்படையும் நேசநாட்டாரின் படையெடுப்பிலிருந்து 12,000 மைல்கள் நீளமுள்ள அச்சுநாட்டாரின் கடற்கரையைத் தற்காப்புசெய்ய காத்துக்கொண்டிருக்கின்றன என்பது நிச்சயம். இதே சமயத்தில் மறுமுறை நடவடிக்கையை ஆரம்பிக்க யூ படகுகள் தயாராகிவருகின்றன. இவைகளும் யுத்தத்தின் நெருக்கடியான சமயத்தில் உபயோகப்படவில்லை.

மே, ஜூன் மாதங்களில் படையெடுப்புக்காகவந்த ஏராளமான துணைக்காவல் கப்பல்களை யூ படகுகள் வழிமறித்துத் தாக்கமுடியவில்லையென்பதிலிருந்து ஸிஸிலியில் படையெடுப்புக்கு உபயோகப்பட்ட நேசதேச கப்பற்படை பலத்தை யூ படகுகள் குறைத்துவிட முடியவில்லையென்று லண்டனிலிருந்தும் வாஷிங்டனிலிருந்தும் செய்திகள் வந்திருக்கின்றன.

### படையெடுப்புக்கு இன்னும் 2 மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் தேவை.

யூ படகுகளின் நடவடிக்கைகளில் சோர்வு ஏற்பட்டபோதிலும் நேசதேசங்களில் கப்பல் கட்டும் வேலை மும்முரமாகவே நடைபெற்று வருகிறது. அச்சுப்பிரசாரர்கள் மிகையாக வெளியிட்ட கப்பல் நஷ்டங்களுக்கு பதிலாக கப்பல்களைக் கட்டியதுடன் 2 மிலியன் டன்கள் எடைமானமுள்ள உபரிக் கப்பல்களையும் நேசதேசங்கள் கட்டிவிட்டன. இதிலிருந்து தற்போதிய நடவடிக்கைகளுக்கு மட்டுமில்லாமல் வரப்போகும் படையெடுப்புகளுக்கும் 2 மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் உதவிசெய்யுமென்பது விளங்குகிறது.

மிஸ்ட்டர் சர்ச்சிலைப் போலவே முஸோலினியும் இதாலிய மக்களுக்கு உத்சாகம் உண்டு பண்ணும்படியாக சொற்பொழிவு ஆற்றினர். பிரிடனுக்கு படையெடுப்பு பயம் உண்டாகி இருந்தபொழுது பிரிடிஷ் மக்களுக்கு மிஸ்ட்டர் சர்ச்சில் ஒரு செய்திவிடுத்தார். "நாம் கடற்கரையில் நின்று எதிரியைத் தாக்குவோம்." என்று சொன்னர். ஸிஸிலியைப் படையெடுக்கும் சமயத்தில் "நாம் எதிரியுடன் கடற்கரையிலேயே யுத்தம் செய்வோம்" என்று முஸோலினியும் பிரசங்கம் செய்தான்.

**ஜெர்மனியின் கடற்படையின் பலஹீனம் ஆபத்தானது.**

ஸிஸிலியின் கடற்கரையில் மும்முரமான சண்டை நடைபெற்றதாக புலப்படவில்லை. பிரிடனுடைய கடற்கரையில் சண்டை போடவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. பிரான்ஸுக்கும் டோவருக்குமுள்ள 20 மைல்கள் கொண்ட சமுத்திரத்தைத் தாண்டி வருவதற்கு ஜெர்மனியிடம் கடற்படையும் கட்லாதிக்கமும் கிடையாது. கடல் மார்க்கங்களை விமானங்கள் சுலபமாகத் தாண்டிவிடலாமென்றும், தீவுகளின் ஆக்கிரமணம் அனுவசியமென்றும் நினைத்த ஹிட்லர் தீவுகளின் வழியாகத்தான் ஐரோப்பாக் கண்டத்துக்குப் பாயக்கூடு மென்றும் கடலாதிக்கம்தான் அவசியமென்று அறிந்துவிட்டான்.

முக்கியமான லக்ஷியங்களை வெடி விமானங்கள் தாக்குவதிலிருந்து எதிரியின் தற்காப்புகள் பலஹீனப்பட்டுவிடுகின்றன. ஆகிலும் துருப்புகள் இறங்குவதற்கும் துருப்புகள் வெற்றிபெரும் வரையில் அவர்களுக்கு போஷணைக்கும் கடற்படைதான் உதவியளிக்கக்கூடும். ஹிட்லரின் அரண்களை ஊடுருவிச் செல்லுவதற்கு நேசநாடுகள் 2,000 கப்பல்களை உபயோகப்படுத்துவதிலிருந்து, வெற்றி பெருவதற்கு நேசநாடுகள் போட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பதில் சந்தேகமடையவேண்டியதில்லை. அந்தத் திட்டப்படி ஆயிரக்கணக்கான கப்பல்கள் கட்டப்பட்டு கடியாரத்தின் உருவுகள்போல அவைகள் தரைப்படைகளுடனும், விமானப்படையுடனும் ஒன்றேடொன்று ஒத்து உழைக்கவேண்டுமென்பது அடிப்படியான கொள்கை.

---

# பெல்ஜியம் அச்சுநாட்டினரை எதிர்த்து தொடர்ச்சியாய் சண்டை செய்கிறது.

நேசநாடுகளுக்காக வீரத்தோடும், சிறத்தையோடும் அச்சுநாட்டினரை எதிர்த்து பெல்ஜிய மக்கள் சண்டைசெய்வதைப்பற்றி எடுத்துக்கூற நாம் இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகிக்கிறோம்.

பிராங்கோ ஜெர்மன் சமாதானத்திற்குப்பிறகு பெல்ஜிய அரசாங்கம் லண்டனில் நிறுவப்பட்டபொழுது வெளிநாட்டு விஷயங்களைத்தான் முதன்முதல் கவனிக்க ஆரம்பித்தது. 1940ம் வருஷம் நவம்பர் மாதம் 29-ம்தேதி, இதாலிய ஸப்மரின் ஒன்று 'கபாலோ' என்ற பெல்ஜியக் கப்பலை மீன்வெடியால் நாசமாக்கியவுடன், பெல்ஜிய அரசாங்கம் இந்தச் செயலின் காரணத்தாலும் இதுபோன்ற பல இதாலியர்களின் அக்கிரமமானகாரியங்களாலும் இதாலியருடன் இனிமேல் எதிரியாகவே சம்பந்தம் வைத்துக்கொள்ளுவோமென்று ஒரு அறிக்கை வெளியிட்டது. இம்மாதிரி சொல்லப்பட்டதானது இதாலிக்கு எதிரியாக யுத்தத்தில் இறங்கியது போலத்தான். அதன்பிறகு பின்லாந்து, டென்மார்க், ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா ஆகிய தேசங்களுடன் வைத்திருந்த ராஜீய சம்பந்தத்தை பெல்ஜிய அரசாங்கம் நிறுத்திவிட்டது. நேசநாடுகள் ஜூன் மாதம் 12-தேதியிலும், ஸெப்டம்பர் மாதம் 24-தேதியிலும் கூடியபொழுது பெல்ஜியத்தின் சார்பிலே ஒருவர் கலந்து கொண்டிருக்கிருர். வாஷிங்டன் கிராண்ட் அலையன்ஸிலே பெல்ஜியம் கையெழுத்திட்டும் இருக்கிறது.

**சைனியம்.**

அச்சுநாடுகளுக்கு எதிரியாய் செய்யும் நேசதேச நடவடிக்கைகளில் பெல்ஜியத்தில் படைகள் போற்றத்தக்க நடவடிக்கைகள் நடத்தியிருக்கின்றன. 1940-ம் வருஷம் டிஸம்பர் 3-ம் தேதியின் தீர்மானத்தின் பிரகாரம் பெல்ஜியத் துருப்புகள் அழைக்கப்படலாம் என்று நிர்மாணிக்கப்பட்டது. அப்பொழுது, அர்ஜெண்டைன், சைனு, உருக்வே, டச்சுக்கிழக்கு இந்தியத் தீவு ஆகியநாடுகளிலும் இன்னும் இதர நாடுகளிலும் இருந்த நூற்றுக்கணக்கான பெல்ஜிய மக்கள் ஆயிரக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்து இங்கிலாந்திலுள்ள பெல்ஜியப்படையைச் சேர்ந்துகொண்டனர். உடனே பெல்ஜியப்படைகள் பிரிடிஷ் சைனியத்தோடு ஒன்றுபட்டு அபிஸீனியாவில் சண்டைசெய்தனர். அஸோஸா, காப்பெலா சையோ ஆகிய இடங்களில் நடந்த யுத்தங்கள் பெல்ஜிய சைனியங்களின் தீரத்தையும், போர்வலிமை

யையும் தெளிவுபடுத்தக்கூடிய சான்றுகளாயிருக்கின்றன. காலாசிடானேவின் இதாலியத் துருப்புகளை நடத்திக் கொண்டுவந்த ஜெனரல் காஸ்ஸெரா, 15,000 துருப்புகளையும் போதுமான அளவு யுத்த தளவாடங்களையும் தன்னுடன் கொண்டுவந்திருந்தாலும், 1941-ம் வருஷம் ஜூலை மாதம் பெல்ஜியக் குடியேற்றநாட்டுப்படையிடம் சரணடைந்தான். லியோபோல்ட்வில்லி ரேடியோ சொல்வதுபோல், பெல்ஜிய குடியேற்ற நாட்டுப்படையானது, நேசதேசத் துருப்புகள் ஐரோப்பாவில் செய்யப்போகும் படையெடுப்பில் பங்கெடுத்துக் கொள்ளவும், அவர்களின் தாய்நாட்டின் ஸ்வதந்திரத்தைத் திரும்பப் பெறவும் எகிப்திலே காத்துக்கொண்டிருக்கின்றனர்.

## விமானப்படை.

1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் ராயல் விமானப்படையின் பைட்டர் காம்மாண்டோடு, பெல்ஜிய ஸ்பிட்பையர் விமானப்படையும் இருந்தது. வடக்கு ஆபிரிக்காவில் பெல்ஜிய சண்டையிடும் விமானப்படையும் ராயல் விமானப்படையோடுசேர்ந்து சண்டைசெய்தது. ஐந்து பிரிடிஷ் சண்டையிடும் விமானப்படைகளை பெல்ஜிய தளகர்த்தர்கள் நடத்திக்கொண்டு போயினர். பிரிடனிலுள்ள பெல்ஜிய விமானப்படையின் பலம் பிரான்ஸிலிருந்து அதன் பிறகு பிரிடனிற்கு பறந்துவந்து ராயல் விமானப்படையைச் சேர்ந்துகொண்ட பெல்ஜிய விமானிகளைக்கொண்டிருந்தது. பெல்ஜிய விமானப்படை பிரிடன் யுத்தத்தில் தீரமான செயல்கள் புரிந்திருக்கின்றது. 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 19-ம் தேதி நடந்திய டியப் படையெடுப்பில் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறது. 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 15-ம் தேதிக்குள் ஜெர்மானியர் ஆக்கிரமித்திருந்த பிரதேசங்களிலேயே நடந்த விமானச் சண்டையில் 75 எதிரி விமானங்களையும் சுட்டுத்தள்ளியிருக்கிறது.

## கடற்படை.

பெல்ஜியம் சரணடைந்தபின் 200-க்கு மேற்பட்ட பெரும்படகுகளும், 100 சிறிய படகுகளும் பிரிடிஷ் துறைமுகங்களிலே தங்கியிருந்தன. அதுமுதல் சுரங்கவெடிகளினாலும், மீன் வெடிகளினாலும், ஆகாய விமானங்களினாலும் ஏற்படும் ஆபத்துக்களைக்கண்டு பீதி அடையாமல் அந்தப்படகுகள் கடல்களிலேயே தங்கள் தங்கள் வேலைகளைச் செய்துகொண்டு தானிருந்தன. படையெடுப்பிற்குப்பின், பெல்ஜிய அரசாங்கம் எல்லாக் கப்பல்களையும் பிரிடனுக்குச் செல்லுமாறு உத்தரவிட்டது. இதனால் 350,000 டன்கள் நிறையுள்ள கப்பல்கள் பிரிடனின் கப்பல் களோடு அதிகமானதன்னியில், பிரிடனிற்கு முக்கியமான மூலாதாரப் பொருள்களும் உணவுப்பொருள்களும் கொண்டுவரப்பட்டன. அதுமுதல் பெல்ஜிய வியாபாரக் கப்பல்கள் பெல்ஜியத்தின் ஆட்களால் ஓட்டப்பட்டு பெருங்கடல்களில் சென்று நேசதேசத்திற்கு வேண்டிய ஸப்ளைகள் எல்லாம் சரிவர பார்த்துக்கொண்டது.

## பெல்ஜியம் காங்கோ.

ஆபிரிக்காவிலுள்ள பெல்ஜியன் காங்கோ, என்ற பெல்ஜியத்தின் குடியேற்ற நாடு ஒன்றும் இந்த யுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்டு, பெல்ஜியத்தின் யுத்த முயற்சிகளை அதிகப்படுத்தியது. பெல்ஜியன் காங்கோ பெல்ஜியத்தைப்போல் 80 மடங்கு பெரிதாய், 100,000 சதுரமைல்கள் விஸ்தீர்ணமுடையதாய் உள்ள பெரிய பிரதேசம். அப்பிரதேசத்தில் 25,000 சதுரமைல்கள் விஸ்தீர்ணமுள்ள பெல்ஜியத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசமான ரூவாண்டா உருண்டியும் சேர்க்கப்பட்டு யுத்த முயற்சிகளில் ஈடுபட்டது. பெல்ஜியன் காங்கோவில் இயற்கையாய்க் கிடைக்கும் பலபொருள்களும் அதிகமாய் இருக்கிறது. அங்கு கிடைக்கும் உலோகப் பொருள்கள் யுத்த தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய அளவு முக்கியமானவைகளாகக் கிடைக்கின்றன. கடாங்கா சுரங்கங்களில், உலகத்திலேயே உள்ள பெருந்தொழிற்சாலைகளுக்கு வேண்டிய அளவு உலோகங்கள் கிடைக்கின்றன. காங்கோ சமவெளியில், இன்றைய தினம் எவ்விதத்திலும் குறைவான மதிப்பில்லாத ரப்பர்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. யுத்தம் ஆரம்பித்தது முதல் காங்கோவில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களெல்லாம் அவர்கள் செய்துகொண்ட வியாபார வர்த்தமானம் புதுப்பிக்கப்பட்டு இன்னும் அமுலில் இருந்துவருவதன்படி நேசதேசங்களுக்கே அனுப்பப்படுகின்றன.

உலகத்திலேயே நடந்துவரும் போக்குவரத்துக்களில், விமானத்தினாலும், நதிகளிலும், தரைகளிலும், வேண்டிய அளவு போக்குவரத்துகளுக்கு காங்கோ பிரதேசம் மிகவும் முக்கியமானதான மத்திய ஸ்தலமாகயிருக்கிறது. அதன் விமான நிலயங்கள் அதிகமாய் கட்டப்பட்டுக்கொண்டுவரப்படுகிறது. புகை வண்டிகளாலும், ரோட்டுகளிலும், கப்பல்களிலும், ஏற்றிச் செல்லப்படும் பொருள்களின் அளவு அதிகமாகிக்கொண்டேயிருக்கிறது.

இந்த 20 வருஷங்களுக்குள் பெல்ஜியம், 2-ம் முறையாக யுத்தத்தினல் ஏற்படும் கஷ்டங்களுக்கு இலக்காகி இருக்கிறது. ஐரோப்பாவில் எந்த நாடும் இன்றைய தினம் அவ்வளவு கஷ்டங்களுக்கு ஆளாகவில்லை. ஆனல் லண்டனிலுள்ள பெல்ஜிய அரசாங்கமும், பெல்ஜியத்திலுள்ள மக்களும் இன்னும் முறியடிக்கப்படவில்லை என்பதை நன்ருய் வெளிப்படுத்துகிருர்கள். பெல்ஜிய மக்களின்பலமும், அவர்கள்செய்துவரும் எதிர்ப்புகளும், எல்லா ஸ்வதந்திர விருப்பமுள்ள நாடுகளும் போற்றதக்கவிதமாய் இருக்கிறது. "சுத்திக்கும் உணர்ச்சிக்கும், சண்டை நடந்தால், உணர்ச்சிதான் ஜயம்பெறும்" என்று பெல்ஜிய மக்களைப்பற்றி நெபோலியன் சொன்னன். இன்றைய தினம், பெலஜிய மக்களின் சுத்தியும், அவர்களின் மன உணர்ச்சியும் ஒன்றுசேர்ந்து, அவர்களின் நாட்டைக்கைப்பற்றிய எதிரியை விரட்டுவதில் ஈடுபட்டிருக்கிறது.

---

## கிரீஸ் முறியடிக்கப்படவில்லை.

கனமான லிபரேடர் வெடிகுண்டெறியும் விமானங்கள் கிரீஸிலுள்ள ஸெடிஸ், எலூஸிஸ், ஹாஸ்ஸினி முதலிய விமான தளங்களைத் தாக்கியிருக்கின்றன. இதிலிருந்து கிரீஸ் மார்க்கமாக நேசதேசப்படையெடுப்பு ஏற்படக்கூடுமென்ற பீதியும் அச்சுநாடுகளுக்கு உண்டாகிவிட்டது. ஸெடிஸ் என்பது ஸலோனிகாவுக்குத் தெற்கேயுள்ளது. 1918-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் நேசதேசப்படைகளும் கிரேக்கர்களும் ஸலோனிகா போர்முனையிலிருந்து புறப்பட்டு வார்தார் பள்ளத்தாக்கில் ஊடுருவிச்சென்று கிழக்குப்போர்முனையிலிருந்த வல்லரசுகளை முறியடித்தது முதல் ஸலோனிகாவைக் கண்டு ஜெர்மானியர்கள் நடுநடுங்குகிருர்கள். எல்லா கொரில்லாப்படைகளும் மத்தியகிழக்கிலுள்ள நேசதேசத்தலைவரின் அமுலுக்குட்பட்டு ஒன்றுபடவேண்டுமென்று கெயிரோவிலிருந்து வந்த செய்தியைக் கேட்டும் ஜெர்மானியர்கள் கலங்குகிருர்கள். நேசதேசப் படைகளின் தாக்குதல்களிலிருந்து கிரீஸைக்காப்பாற்றுவது என்ற ஜெர்மன் திட்டத்துக்கு இச்செய்தி குந்தகம் விளைவித்துவிட்டது.

### நாஸி தற்காப்புகள்.

கிரீஸில் தங்களுடைய நிலைமையைப்பற்றி அச்சுநாடுகள் கவலைகொண்டு, கிரீஸில் நேசநாடுகளின் தாக்குதல் வேகத்தைக் குறைப்பதற்காக சுற்றியிருக்கும் தீவுகளில் அவர்கள் அரண்களை அமைத்து வருகிருர்கள். கிரீட்டில் பலமான கடற்கரை அரண்களும் உள்நாட்டில் பரஸ்பர ஸம்பந்தமுள்ள தற்காப்புகளும், அமைக்கப்பட்டிருக்கின்றன. இதை விஞ சுரங்கங்களும், டாங்குகளையும் குடைத்துருப்புகளையும் கபடமாக அழிக்கும் சாதனங்களும், முள்ளுக்கம்பி வேலிகளும், சுரங்கவெடிகளும் ஏராளமாகத் தாயரிக்கப்பட்டிருக்கின்றன. கரடுமுரடான ஸ்கார்பாண்டோ மலைபிரதேசத்தில் மலைச்சரிவுகளிலுள்ள ஆழமான குகைகளிலிருந்து கொண்டு உயிர்தரப் பயிற்சி பெற்ற துருப்புகள் சதாகாலமும் ரோந்து செய்து வருகின்றன. ரோட்ஸ் தீவிலும் பலமான அரண்களும், சுரங்கவெடிகள் பாவப்பட்ட ஸ்தலங்களுக்குப்பின்னல் ஒளிகளும், கட்டப்பட்டிருக்கின்றன. இதாலிய கடற்கரை பீரங்கிகளும், ஏராளமான படகுகளும் நீர்மூழ்கிகளும் லேசான வெடி விமானங்களும், சண்டை விமானங்களும் ரோட்ஸைக் காப்பாற்றிவருகின்றன. லேராஸ், ஸாமாஸ் தீவுகளிலும் பலமான தற்காப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சியாங் தீவுக்கப்பால் வடமேற்குப்பக்கத்தில் தென்கிழக்கு ஐரோப்பாவின் கேந்திரஸ்தானமான திரேஸ் கடற்கரையிலும் பலமான அரண்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பயஙகரமான பீரங்கிகள் நிலைநாட்டப்பட்டிருக்கின்றன. ஸலோனிகா வளைகுடாவில் ஒளிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. டெடிகாச்சு என்னும் துறைமுகத்தில் பலமான முதல் தரமான தளம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் ஸலோனிகாவிலிருந்து காவல்லாவுக்குப்போகும் ராணுவ ரஸ்தாவுக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. ஸலோனிகாவுக்கு சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் அச்சுநாட்டு தளகர்த்தர்கள் எல்லோரும் ஒன்றுகூடிப் பேசினர்கள். சமீபத்தில் கிடைத்த தகவல்களிலிருந்து திரேஸிலுள்ள பல்கேரியத் துருப்புகளுக்கு பதிலாக ஜெர்மன் துருப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவாம்.

### கிரேக்க கொரில்லாப்படைகள்.

கிரீஸின் எல்லைப்புற அரண்களை அச்சுநாடுகள் பலப்படுத்திவரும் பொழுது கிரீஸ் தேசத்தில் ஒரு மகத்தான கபடமான கோஷ்டியிருந்து கொண்டு அச்சுநாடுகளுக்கு சதாகாலமும் பீதியை உண்டாக்கிவருகிறது. 30,000 கிரேக்க கொரில்லாப்படைகளும், 1941-ம் வருஷத்தில் கிரீஸை விட்டு நேசதேசத் துருப்புகள் ஓடிய பொழுது பாக்கியிருந்த 3,000 பிரிடிஷ், ஆஸ்திரேலிய நியூஸீலாந்துத் துருப்புகளும் சேர்ந்துகொண்டு மலைகளில் ஒளிந்துகொண்டு அச்சுத்துருப்புகளைக் கபடமாகத் தாக்கிவருகின்றன. எதிரிக்கு ஏராளமான நஷ்டமும் ஏற்பட்டுவருகிறது.

மேஜர் டௌரரஸிடம் உள்ள கொரில்லாப்படைகள் மாஸிடோனியா, திரேஸ் வழியாகச் செல்லும் ஜெர்மன், பல்கேரியத்துணைக்காவல் கப்பல்களைத் தாக்குவதில் கவனம் செலுத்து கின்றன. யூகோஸ்லாவியாவிலும் ஆல்பேனியாவிலும் உள்ள மிகலோவிச்சின் துருப்புகளுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கின்றன. அவரும் தெர்மாபொலிக்கு சமீபத்தில் வேலை செய்துவரும் காப்டன் பாப்பாஸும் ஆதென்ஸிலிருந்து ஸலோனிகாவுக்குப்போகும் இருப்புப் பாதையில் செல்லும் ரெயில் வண்டித்தொடர்களைக் கவிழ்த்துவிட முயலுகிறார்கள். இதிலிருந்து ஜெர்மனியின் ஸப்ளைகள் தினசரி போவது தடைபட்டுவிடுகிறது. மற்றொரு கொரில்லாப்படை ஸ்பார்டாவுக்கருகில் குவிந்திருக்கிறது. கிரீட்டில் ஜெனரல் மாண்டகாஸின் கீழ் ஒருபலமான படை யிருந்துவருகிறது. அவர் ஜெர்மன் ஆபீஸர்களைப்பிடித்துக் கைதி செய்து ஜெர்மானியர் ஒழுங்கானமுறையில் நடந்துகொள்வதற்குப் பிணையாள்களாக அவர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சுறுசுறுப்பாக வேலைசெய்துவரும் கொரில்லாப்படைகளின் சங்கியைக்குறைவுதான். ஆகிலும் அச்சுத்துருப்புகள் படும் அவஸ்தையைப்பார்த்தால் அவர்களின் சங்கியை 3 லக்ஷமென்று மதிக்கலாம். சமீபகாலத்தில் குயிஸ்லிங் மந்திரி கையொப்பமிட்ட துண்டுபிரசுரங்களை ஜெர்மன் விமானங்கள் கிரீஸில் வீசின. அவைகளில் மே மாதம் 20-ம் தேதிக்குள் ஆயுதங்களைப் பரிகரித்து சரணடைந்து விடுகிறவர்களுக்கு மன்னிப்பும் அவ்விதம் செய்யாதவர்களுக்கு கடுமையான சிக்ஷை விதிக்கப்படுமென்றும் வரையப்பட்டிருந்தது. கிரேக்க கொரில்லாப்படைகளும், அயல் நாட்டிலிருந்து வரப்போகும் துருப்புகளும் சேர்ந்து அச்சு நாடுகளை கிரீஸைவிட்டுத் துரத்தியடித்து, ஏஜியன் கடல் காற்றில் கிரீஸின் தலைநகரில் நீலவர்ணமும் வெண்மை நிறமுமுள்ளத் த்வஜங்கள் பறக்கும்வரையிலும் கிரேக்க கொரில்லாப் படைகள் சரணடையமாட்டார்கள்.

---

## போலந்து ஜனங்கள் ஜெர்மன் உடை தரித்திருந்தார்கள்.

### ஸிஸிலியில் நேசதேசத்தாரிடம் சரணடைவதில் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்.

தெற்கு ஸிஸிலியிலுள்ள லிகாடாவிலிருந்து ராயிடரின் விசேஷ நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்.

லிகாடாவிலுள்ள பொதுஜன பூந்தோட்டத்தின் க்ராதிக்குப்பின் ஜெர்மன் கைதிகளில் சிலர் அமர்ந்திருந்தார்கள்.

இன்று பிற்பகலில் அவர்களுடன் ஜெர்மன் பாஷையில் சம்பாஷணை செய்தபொழுது அவர்கள் போலந்து பாஷையில் பதிலுரைத்தார்கள். இரண்டு யூகோஸ்லாவியர்களைத் தவிர மற்றெல்லோரும் போலிஷ் ஜாதியார்கள். எல்லோரும் ஜெர்மன் உடைகளை அணிந்திருந்தார்கள். பெரும்பான்மையோர் போலிஷ் காரிடாரிலிருந்தும் டான்சிக்கிலிருந்தும் ஸைலீஷ்யாவின் வடபாகத்திலிருந்தும் வந்தவர்கள்.

அவர்கள் ஜெர்மன் நாமதேயத்தைப் பெற்றிருந்ததால் அவர்களை ஜெர்மன் ஜாதியாரென்று மதிக்கப்பட்டது. அதாவது அவர்களை ஜெர்மானியர்கள் கட்டாயப்படுத்தி ராணுவத்தில் சேர்த்துவிட்டார்களென்று பொருள்படுகிறது. அவ்விதம் ஜெர்மன் சேனையில் சேர்க்கப்பட்டவர்கள் தங்களுடைய நாடுகளை அழித்ததும், பெற்றோர்களைக்கொன்றதும், சகோதரர்களை கைதிமுகாம்களில் அடைத்ததுமான ஹிட்லரின் புதிய திட்டத்துக்காகச் சண்டை போடுகிறார்கள்.

இவர்கள் ஸிஸிலிக்கு அனுப்பப்பட்டார்கள். இவர்களை ஆக்கிரமிப்புநாடுகளின் பாதுகாப்புக்கு அனுப்புவது சாவதானமில்லையென்பது ஸ்பஷ்டமானது. ஏனெனில் அவர்களுக்கு எவ்கைப்பட்ட நோக்கங்களிருக்கிறதென்பதும் தெளிவானது. வெகு சீக்கிரத்தில் அவர்கள் அமெரிக்கர்களிடம் சரணடைந்தார்கள். சரணடைவதில் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தோஷத்தை அவர்கள் ஜெர்மன் பாஷையில் வெளியிட முடியவில்லை.

ஜெர்மனியின் சேனையில் ஒரு சிறு பகுதியார் யூகோஸ்லாவியர்களுமுண்டு. இதை ஆதாரமாகக் கொண்டு ஒரு மகத்தான முடிவுக்கு நாம் வருவது அபாயகரமானது. ஆகிலும் ஜெர்மனியின் மனிதபலம் குறைவடைந்து வருகிறதென்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

---

## ஜப்பானியர்கள் அமானுஷமான சக்தியுள்ளவர்களல்ல.

(ஹென்ரி கீஸ்.)

பஸிபிக் சமுத்திர யுத்தம் தளங்களைப்பிடிப்பதற்குப்போடும் சண்டையாக மாறிவிட்டது. வரப்போகும் காலத்தில் தீவுக்குப்பின் தீவாக சண்டை நடைபெறப் போகிறது. இதற்குக்

காரணம் நம்மிடம் குறைவான அளவில் வெடி விமானங்களும் சண்டை விமானங்களும் இருப்பதும் கடற்படை பலம் இல்லாததும்தான்.

அப்படியிருந்தும், தீவுகளுக்காக நடைபெறப்போகும் சண்டைகள் ஜப்பானை அழிக்கப் போகின்றன. முதலாவதாக, ஜப்பானியர்கள் சண்டை போடுவதைவிட புத்திசாலித் தனமாக நடப்பதுதான் சிறந்த முறையென்று இப்பொழுதும் அறிந்துகொள்ளவில்லை. இரண்டாவதாக ஜப்பான் அகலக்கால் வைத்துவிட்டதால் இறுதியான முடிவுவரையில் சண்டையை நடத்தித்தான் தீரவேண்டும். முடிவான யுத்தம் செய்தால் ஜப்பானுக்கு நாசம் ஏற்பட்டுவிடும்.

தென்கிழக்கு ஸாலமன்ஸ் தீவுகள் யுத்தத்தில் ஐந்து மாதங்களில் ஜப்பானுக்கு உண்டாகியிருக்கும் நஷ்டத்தை கவனியுங்கள். 25 சிறிய கப்பல்கள் நாசமாகிவிட்டன. இதைவிர 2 யுத்தக்கப்பல்கள் மூழ்கிவிட்டன. 10 கப்பல்கள் மூழ்கியிருக்கக்கூடும். 46 கப்பல்கள் பழுதுபட்டன. 26 துருப்பேற்றிச் செல்லும் கப்பல்களும் சாமான் கப்பல்களும் மூழ்கிவிட்டன. மற்றும் 7 கப்பல்கள் பழுதுபட்டுவிட்டது.

ப்ளாரிடா, துலாகி, காவுடு, டாளம் போகா, குடால்கனார் முதலிய தீவுகளில் நடைபெற்ற தரைப்போரில் அதமபக்ஷமாக 30,000 ஜப்பானியத் துருப்புகள் சேதமடைந்தார்கள். இந்தக் கணக்கு 35,000மாகவுமிருக்கலாம்.

குடால்கனாருக்கு உதவியனுப்பும் நடவடிக்கையில் மற்றொரு 30,000 துருப்புகள் கடலில் நாசமாகிவிட்டன. விமானப் படையிலும் ஜப்பான் 1,000 விமானங்களை இழந்துவிட்டது.

இந்த நஷ்டக் கணக்குகளைவிட மகத்தான முயற்சி செய்தும் ஏராளமான காவு கொடுக்கத் தயாராகயிருந்தபோதிலும் குடால்கனாரைத் திரும்பிப்பிடிக்கும் முயற்சியில் ஜப்பானியர்கள் தோல்வியுற்றார்களென்பது கவனார்கமுள்ளது.

கிழக்கு ஸாலமன்ஸ் தீவுகளில் கடைசியாக உள்ள தீவாகயிருப்பதினாலும் விமான தளத்திற்கு சிறந்ததாலும் குடால்கனார் ஜப்பானியர்களுக்கு முக்கியமான தீவு. மலேடா, ஸான் கிரிஸ்டோவல் என்ற மற்ற இரு தீவுகளும் காடுகளும் மலைகளுமுள்ள பிரதேசமுள்ளவை. அந்தந்த காடுகளுள்ள மலைகள் சமுத்திரம் வரையில் செங்குத்தாகப் பரவியிருக்கின்றன.

அடுத்தபடியாக நியூ ஹெப்ரிடீஸைப் பிடித்துவிட்டு பிஜித் தீவுகளின்மேல் படையெடுப்புச்செய்யவேண்டும். அப்பொழுது நமது வசதியான ஸப்ளை மார்க்கங்களுக்கு சிரமம் ஏற்படும். விமானமூலமாக ஸப்ளைகளைக்கொண்டுபோவது சாத்தியமில்லை.

### வெகுசீக்கிரத்தில் முறியடிக்கப்பட்டார்கள்.

குடால்கனாரைப் பூராவாகப் பிடிப்பதற்கு அமெரிக்கர்கள் ஜப்பானியர்களுடன் இரண்டு வாரங்களுக்குமேல் போர் புரிந்திருக்கவேண்டும்.

இதன் காரண்மாகத்தான் அதற்குப்பின் நடைபெற்ற யுத்தங்கள் நீடித்துவருகின்றன. வேகம் அவசியமானது. படையெடுக்கும் துருப்புகளுக்கு ஸப்ளைகள் தாராளமாகவும் தேவைக்கு வேண்டிய அளவும் அவ்வப்பொழுது வந்துசேர வேண்டும்.

முடிவாகச் சொன்னால் பஸிபிக் யுத்தப் போரில் ஜப்பானியர்கள் தங்கள் திட்டத்தை மாற்றவேயில்லை. அவர்கள் நியூ ஜார்ஜியாவுக்குச் சென்று அங்கே விமானதளம் ஏற்படுத்தி துருப்புகளையும் குவித்துவைத்துவிட்டார்கள்.

முண்டா விமான தளத்திலிருந்து எதிரி விமானங்களை வழிமறித்து அடிப்பதற்கு வசதி உண்டாகிவிட்டது. குடால்கனாருக்கு அடுத்தபடியாக முண்டா முக்கியத்வம் வாய்ந்தது. அவ்வளவு அபாயகரமானதாக இல்லாவிட்டாலும் யுத்தப்போக்கை பாதிக்கக்கூடிய நிலைமையிருக்கிறது.

அருண்டேல் தீவுக்கும் ஜார்ஜியாவுக்கும் மத்தியிலுள்ள குறுகலான கால்வாய் வழியாக முண்டாவுக்குச் செல்லும் மார்க்கமானது அபாயத்துக்குட்பட்டிருக்கிறது.

### உயர்வான யுத்த தந்திரங்கள்

ஜப்பானியச் சிப்பாய்கள் இந்தியர்களைப் போல யுத்தப் பயிற்சி பெற்றவர்கள். மூஸ்தீப்புகள் உள்ளவர்கள். இது இவர்களுக்கு ஒரு பெரிய இடையூறாகயிருக்கிறது. அதாவது இந்தப் பிராந்தியத்தில் போர்புரியும் அமெரிக்கத் துருப்புகள் ஜப்பானியர்களைவிட சிறந்த யுத்த தந்திரங்களை அறிந்துகையாண்டு வருகிறார்கள். ஆகையால்தான் ஜப்பானியர்களுக்குச் சிரமம் ஏற்பட்டுவிட்டது.

அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்தவர்கள்தான் ஜப்பானியர்களை முதல் முதலில் முறியடித்தவர்கள். இந்தச் சிறிய அநாகரீகமற்றவர்களை எளிதில் முறியடித்துவிடலாமென்றும், தீரமும், வீரமும் பொருந்திய வெள்ளையர்கள் ஜப்பானியர்களைவிட யுத்த தந்திரத்தில் உயர்வானவர்களென்றும் அவர்கள் காட்டிவிட்டார்கள்.

மலேயாவிலும், சிங்கப்பூரிலும் ஜப்பானியர்கள் சுலபமாக வெற்றிபெற்றதைப்பற்றி நான் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தேன். இந்த மாயத்தை அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். ஜப்பானியர்களை முன்னேறுதபடிக்கும் விலாப்பக்கங்களில் முன்னேறும் முறைகளைத் தடுத்தும் செய்துவிட்டால் அவர்கள் தற்காப்புள்ள ஒரு அரணைப் பிளக்க சக்தியற்றவர்கள் என்று வெளியாகிவிட்டது.

### அரணைப் பிளக்கமுடியாதவர்கள்.

பரிஷ்காரமாக அமைக்கப்பட்ட ஒரு படை வரிசையை ஜப்பானியர்கள் பிளந்துவிடுவார் களென்று நான் நம்பவில்லை. அவர்களுடைய படை வரிசைகள் பிளவுபட்டதையும் சிறிய படைகள் துண்டிக்கப்பட்டு அழிவுற்றதையும் நான் பார்த்திருக்கிறேன்.

சில ஜப்பானியர்கள் எதிரியின் படை வரிசைகளை அதிக சிரமப்பட்டு ஊடுருவிச்செல் லுவதையும் பிறகு அவர்கள் நடுவில் அகப்பட்டுக்கொள்ளுவதையும்தான் பார்த்திருக்கிறேன்.

கிழக்குப் பிரதேசத்தில் ஜப்பானியர் கொலையாளிகள் என்று வெளிப்படுத்திவிட்டார்கள். அப்பாவிகளும், நிரபராதிகளுமான பொதுமக்களை ஆயிரக்கணக்காக வதைப்பதில் அவர் களுக்குத் துயரமே கிடையாது.

ஆசியாவிலுள்ள நகரங்களையும் பட்டணங்களையும் அவர்கள் மனதாரத் தாக்கினார்கள். காயம்பட்டவர்களுக்கும், நோயாளிகளுக்கும் சிகிச்சை செய்வதில் ஏற்படக்கூடிய குழப்பத் தையும் சிரமத்தையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. யுத்தத்தில் ஈடுபடாத ஜனங்களின் கஷ்டங்களை வெள்ளையர்கள் சகிக்கமாட்டார்களென்றும் அவர்களுக்குத் தெரியும்.

### கண்மூடித்தனமாக அடிக்கிறார்கள்.

அவர்களுடைய, வெற்றிக்கும் தோல்விக்கும், இரக்கமன்னியில் தண்டனை விதிப்பதின் மூலம் வெள்ளையர்களின் மனோதைரியத்தைக் குலைத்துவிடலாமென்று ஜப்பானியர்கள் எண்ணுவதுதான் காரணமாகும். இக்காரணத்தினால்தான் ஜப்பானியர்கள் சனியன்களைக் கொண்டு தாக்கும்பொழுது கண்மூடித்தனமாக யந்திர பீரங்கி வெடிகளுக்கும் பீரங்கிகுண் டுகளுக்கும் இரையாகுகிறார்கள். "எதிரிகளே, உயிர் துறந்துவிடுங்கள், சரணடையுங்கள்" என்று சொல்லிக்கொண்டே அவர்கள் இறக்கிறார்கள். நிதானத்துடன் இருக்கும் நமது துருப்புகளுக்குக் கூச்சலிட்டுக்கொண்டு கலகக்காரக்கூட்டம் போலிருக்கும் எதிரிகளைத்தாக் குவதில் பயமும் அழிவும் ஏற்படாது.

இவ்விதமாக நிதானமற்று முன்னேறியதினால் அவர்கள் சரீரம் வெடி குண்டுகளால் துளைக்கப்பட்டு, குவியல் குவியலாக அவர்களுடைய பிரேதங்கள் காணப்படுகின்றன.

வேறுவிதமாக யுத்தம் செய்யும் முறைகளை அவர்களுக்கு இனிமேல் போதிக்கமுடியாத தால் அவர்கள் இவ்விதமாவேதான் ஏராளமாக மடிந்துவிடுவார்கள். உண்மையாகச் சொன் னால் ஜப்பானிய யுத்த தந்திரம் உபயோகமற்றது. நடவடிக்கையிலும் பிரயோஜனமற்றது.

ஜப்பானியரின் யுத்த தந்திரத்தில் புதிய முறைகளையும் தீடீர் தாக்குதலையும் கண்டு, இருட்டைக்கண்டு பயந்துகொள்ளும் குழந்தைகளைப்போல நாம் பயங்காளிகளாக ஆகிவிட்டோம்.

ஜப்பானியருடன் போர்புரியும் ஸோல்ஜரும், உத்தியோகஸ்தரும், ஜப்பானுடைய திற மையைக் குறைவாக மதிக்காதபோதிலும் அவன் மிகவும் சாமர்த்தியசாலி என்று ஒருவரும் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு வருஷத்திற்குமுன் இருந்ததுபோல் அவன் அபாரமான சக்தியுள் ளவனென்று சொல்லமுடியாது.

ஜப்பானியருடைய முரட்டுத்தனத்துக்கும், தீரத்துக்கும், சரணமடைவதைவிட இறப் பதுதான் சிறந்ததென்று அவன் வெறிபிடித்தவன்போல தீர்மானம் கொண்டிருப் பதுதான் காரணமாகும்.

---

## சியாமின் நிலைமை.

ஜப்பானியர்கள் சியாமை ஆக்கிரமித்ததுமுதல் சியாம் தேசக்கடன் 300,000,000, பாட்டுகள் (சியாம் தேசத்து நாணயம்) வரையிலும் அதிகமாகி இருக்கிறது. ஜப்பானியப் படையெடுப்பாளர்களின் தேவைகளைப் பெறுவதற்காகவும், யுத்த பலமான ரஸ்தாக்கள், விமான நிலயங்கள், ரயில்வேக்கள் இன்னும் இவைபோன்ற இதர ராணுவ நடவடிக்கைகளுக் கேற்ற சாதனங்கள் இவைகளை அடைவதற்காகவும் செலவிடப்பட்ட பெருந்தொகையைச் சரிப்படுத்துவதற்கென வாங்கிய கடன்களைக் கொடுப்பதற்காக எல்லாவிதமான அரசாங்க கடன் பத்திரங்களும் கொடுக்கப்பட்டன. இத்தகைய கடன் பத்திரங்கள் அதிகமான வரியினாலும் உயர்ந்த விலையினாலும் ஏற்கனவே கஷ்டப்படும் பொதுமக்களால் வாங்கிக்கொள்ளப்படமாட்டாது. ஆகையினால் பாங்கிகளாலும், இதர பாங்கி போன்றவைக ளாலும், ஸேவிங்ஸ் பாங்கிகளாலும்தான் அந்த பாண்டுகள் வாங்கிக் கொள்ளப்படவேண்டும் அந்த பாங்கிகள் எல்லாம் அம்மாதிரி செய்வதினால் ஜனங்களுக்குத்தான் கஷ்டம். அவர்கள் வேண்டும்போது அவர்கள் பணங்களை பெறமுடியாது.

ஜப்பானீய ஆக்கிரமிப்பிலிருந்து விலைவாசிகள் அதிகமாகிவிட்டது. அரிசியின் விலை 100-க்கு 100-ஆக அதிகமாகியிருக்கிறது. அதற்குக் காரணம் இரண்டு வகைப்பட்டது. முதலாவது அரிசி அதிகமாய்க் கிடைத்த பிரதேசத்தில் அதன் அளவு குறைவானதும், இரண்டாவதாக எல்லாப் பொருள்களின் விலைவாசியும் அதிகமானதுமாகும். இவ்விதம் குறைவானதற்குக் காரணம் அங்கே ஆக்கிரமித்தவர்களுக்கு ஆகாரமாய்க் கொடுப்பதும், ஜப்பானியர்களின் உத்தரவினால் அரிசி விளைந்த நிலங்களில் பருத்தி விளைவிப்பதுவும்தான். பாட்டின் மதிப்பை என் (ஜப்பானிய நாணயம்) களின் மதிப்பை அதிகப்படுத்தியதால், குறைத்ததினாலும், அதிகமான சாமான்கள் வாங்கியவற்றிற்குப் பணம் கொடுப்பதற்கு பாங்கிகளிலே அதிகமான நோட்டுகள் அடித்து விட்டு அதனால் பாட்டின் மதிப்பு குறைந்ததினாலும் சாதாரணமான விலைகள் அதிகமாயிற்று. அரசாங்கம் பத்திரங்களை வாங்குவதற்கு அதிகமான நோட்டுகள் அடிக்கப்பட்டிருக்கிறது.

---

## மிச்சல் ஞாபகார்த்த வெகுமதி.

அமெரிக்க 14-வது விமானப்படையின் தளகர்த்தரும் சைனாவிலுள்ள அமெரிக்க சண்டை விமானப் படையின் பறக்கும் புலிகள் விமானப்படையை ஸ்தாபித்தவருமான மேஜர் ஜெனரல் கிளேர் L சென்னால்ட் என்பவருக்கு இவ்வருஷத்தில் விமானப் படையின் அபிவிருத்தியில் ஈடுபட்ட அமெரிக்கர்களில் ஒருவர் என்று கௌரவமளிக்கப் பட்டது. அதை மதித்து அவருக்கு ஜெனரல் வில்லியம் E. மிச்சல் ஞாபகார்த்த வெகுமதி யளிக்கப்பட்டது.

1937-ம் வருஷத்தில் சீன விமானிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஜெனரல் சென்னால்ட் சீனாவுக்குச் சென்றார். அங்கேயிருந்த அமெரிக்கர்களைக்கொண்டு ஊதியமற்ற அமெரிக்கப் படை ஒன்றைத் தயார் செய்தார். இந்தச் செய்கையைக் கண்டு அவரை எல்லோரும் கொண்டாடினார்கள். பறக்கும் புலிகள் என்ற விமானங்கள் 400 ஜப்பானிய விமானங்களை நாசம் செய்தன. சைனாப் போர்முனையில் சென்ற வருஷம் அமெரிக்க விமானப் படை ஸ்தாபிக்கப்பட்டபொழுது அங்கிருந்த வாலிண்டியர் படை கலைக்கப்பட்டது.

மிச்சல் ஞாபகார்த்தமாக வெகுமதியென்பது சென்ற யுத்தத்தில் அமெரிக்கப் படையைச் சேர்ந்த விமான பலத்தின் தளகர்த்தராகவும், அமெரிக்க விமானப் படையின் மூல புருஷருமான கியாதி பெற்ற மிச்சல் என்பவரின் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகிறது.

---

## இந்தியச் சேனையைச் சேர்ந்த வைத்திய இலாகாவின் விமானத்தில் செல்லும் ரண வைத்தியப்பகுதி.

இந்தியச் சேனையில் விமானத்தில் செல்லும் ரண வைத்தியப் படையுமிருக்கிறதென்று தெரியவருகிறது. நன்றாகப் பயிற்சிபெற்றும் சரியான மூஸ்தீபுகளுமுள்ள இந்த விமானப் படை தரையில் காயம் பட்டவர்களுக்கு ஒத்தாசை செய்யும் பகுதியின் மற்றொரு கிளையாகும். இந்தப் பகுதியில் டாக்டர்களும், வேலைக்காரர்களும் டோலி தூக்குகிறவர்களுமிருக்கிறார்கள். பாரசூட் மூலம் குதிப்பதில் ஏற்பட்டசிரமங்களை அனுபவிக்கவும், தேவையான பொது வேலையிலீடுபடவும் அவர்கள் தயாராகயிருக்கிறார்கள்.

இவர்களும் குடைத் துருப்புகளுடன் பயிற்சி பெற்றவர்கள். விமானத்தில் செல்லும் ரண வைத்தியப்படைகளும் குடைத் துருப்புகள் பகுதியைச் சேர்ந்தவர்கள். எந்த சமயத்திலும் வைத்தியப் படைகள் பிரிந்து முற்போக்கான யுத்த அரங்கத்துக்கு அவசரமான ஒத்தாசைக்கு அனுப்பப்படலாம். அந்த முன்னணி ஸ்தலங்களில் வைத்திய வசதிகளும், டாக்டர்களும் குடை மூலமாகயிறங்குவார்கள், சாதாரணமாக தரைமார்க்கமாக அந்த ஸ்தலங்களுக்கு வைத்திய வசதிகளை அனுப்புவது கஷ்ட சாத்யமானது. தரைப் பிரதேசத்தின் அமைப்பு சௌகரியமளித்தால் விமானங்கள் கீழேயிறங்கி அவசரமாகச் சிகிச்சை செய்ய வேண்டிய நபர்களை வைத்திய சாலைக்குத் தூக்கிச்செல்லும். பர்மாவில் சமீபத்தில் இவ்விதம் தான் நடைபெற்றது. ஜெனரல் வின்கேட்டும் அவரைச் சேர்ந்தவர்களும் பர்மாவில் நடவடிக்கைகள் நடத்திய பொழுது நோயாளிகளும், காயம்பட்டவர்களுமான 17 நபர்களை இந்தியாவிலுள்ள ஆஸ்பத்திரிக்கு விமானங்கள்தான் தூக்கிக்கொண்டுவந்தன.

---

## யுத்தத்தில் ரசாயனப் பொருள்களின் உபயோகம்.

**(F. C. கிராஸ்).**

அநேக ஜனங்கள் "கெமிகல்ஸ்" என்னும் பதத்தைக் கேள்விப்பட்ட மாத்திரத்தில் ரசாயன சாமான்கள் வைத்திருக்கும் மருந்து ஷாப்பிலுள்ள வரிசை வரிசையாக உள்ள சீசாக்களைக் குறிக்கிறதென்று மனதில் அபிப்பிராயம் கொண்டுவிடுவார்கள்.

இந்தச் சீசாக்களில் ரசாயனப் பொருள்களில்லையென்று நான் சொன்னால் அது அபத்த மாகயிருக்கும். இந்தச் சீசாக்களிலுள்ள ரசாயனப் பொருள்கள் வைத்தியத்துக்கு உபயோகப் படக்கூடியவை. இவைகள் ராத்தல் கணக்கிலும், அவுன்ஸ் அளவிலும் வியாபாரம் செய்யப் படுகின்றன. யுத்தத் தளவாட உற்பத்திக்குத்தேவையான இயற்கை ரசாயனப் பொருள்கள் ஆயிரக்கணக்கான டன்கள் எடை மானத்தில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

யுத்தத்தில் ரசாயனப்பொருள்கள் எவ்விதம் உபயோகிக்கப்படுகின்றன என்பதை விளக்கிக்காட்டுவதற்காக யுத்தத்தில் ஈடுபட்ட மூவகைப்படைகளுக்கும் அவசியமான முஸ் தீப்புகளை இங்கு விவரிக்கிறேன். முதலாவது, நமது துருப்புகளும், மாலுமிகளும், விமானி களும் பருத்தி அல்லது ரோமத்தினால் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்து வருகிறார்கள். இந்தத் துணிகளை உற்பத்தி செய்வதற்கும் அவைகளுக்குக் காகி சாயம் போடுவதற்கும் ரசாயனப் பொருள்கள் தேவை. அதன் பிறகு அவர்களுக்கு தோல் பெல்டுகளும், ஜோடுகளும் இன்னும் அநேக உபகரணங்களும் தேவையாயிருக்கிறது. தோலைப் பதப்படுத்துவதற்கு ரசாயனப்பொருள்கள் அவசியம். ஒவ்வொருவரிடமும் அநேக உலோகங்கள் வார்த்து அமைக்கப்பட்ட துப்பாக்கியும் மற்ற ஆயுதங்களுமிருக்கின்றன. உலோகங்களை வார்ப் பதற்கும் ரசாயனப் பொருள்கள் தேவை. துப்பாக்கியிலிருந்து சுடப்படும் தோட்டாக்களும் ரசாயனப் பொருள்களின் சேர்மானத்தினின்றும் உண்டுபண்ணப்பட்டவைதான்.

பீரங்கிகளையும் துருப்புகளையும் ஏற்றிச்செல்லும் மோட்டார்களுக்கு ரப்பர் டையர்கள் வேண்டும். ரசாயனப் பொருள்களில்லாவிட்டால் ரப்பர் உற்பத்தி செய்யமுடியாது. பீரங்கி களுக்கும், மோட்டார்களுக்கும் பூசப்படும் வர்ணத்துக்கு ரசாயனப் பொருள்களின் சேர் மானம் அவசியமானது.

படைகளின் முஸ்தீப்புகளின் ஒவ்வொரு பாகத்தையும் நான் விவரித்துக் கூறலாம். அதற்கு அவகாசம் போதாது. ஒவ்வொரு முஸ்தீப்பு சம்பாதமாகவும் அதன் உற்பத்தியில் ஏதாவது ஒரு அம்சத்தில் ரசாயனப் பொருளின் சாதகத்தை ஒட்டித்தான் அது உருவாகச் செய்யப்படுகிறதென்றும் நான் சொல்லுவேன். எந்தத் தொழிற்முறையிலும் ரசாயனப் பொருள்களை ஏராளமாக ஏதாவது ஒரு சமயத்திலாவது உபயோகிக்காமலிருக்கமுடியாது. ரசாயனப் பொருள்களில்லாமல் தொழிலே நடைபெறாது.

இது உங்களுக்கு விந்தையாகயிருக்கலாம். எல்லா சமயங்களிலும், முக்கியமாக யுத்த காலத்தில், ரசாயனப்பொருள்கள் எவ்வளவு முக்கியமான பிரயோஜனமுள்ளதென்பதை நீங்களறிந்து கொள்ளவேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. பூமியிலுள்ள தாதுப்பொருள்களை சுத்தம் செய்து யுத்த ஆயுதங்களை உற்பத்தி செய்ய லாயக்குள்ள இரும்பு, எஃகு போன்ற உலோகங்களைத் தயாரிக்குமுன், அந்த வேலைகளுக்கு உபயோகமுள்ள ரசாயனப்பொருள்களையும் உற்பத்தி செய்யவேண்டியது அவசியமென்று ஒவ்வொரு தொழிற்சாலையும் அறியவேண்டும்.

---

## தேசீய யுத்த முன்னணி.
## நகரவாசிகளுக்கு வேண்டுகோள்.

கல்வி கற்றவர்கள் எப்பொழுதாவது குடியானவர்களுக்கு உதவி செய்திருக்கிறீர்களா வென்று கேட்கிறேன். நகரவாசிகள் தங்களுடைய அநுபவத்தையும் கல்வியின் பயனையும் முன்னேற்றமடையாத கிராமவாசிகளுக்கு புகட்டி அவர்களும் க்ஷேமமாக இருக்கும்படி செய்தால்தான் இந்தியாவுக்கு வருங்காலத்தில் க்ஷேமமுண்டாகுமென்று நினைக்க வேண்டாமா என்றும் கேட்கிறேன்.

இப்பொழுது குடியானவர்களுக்கு ஒத்தாசை செய்வதன் மூலம் உங்களுடைய நலத் தையும் கோருவதற்கு அரிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. உங்களுக்கு அறிமுகமான குடியானவர்களுடன் பேசி அவனுக்கு அதிக உணவுப்பொருள் உற்பத்தி செய்யவேண்டு மென்ற புத்திமதியைப் புகட்டுங்கள். நீங்கள் வசிக்கும் நகரத்தில் உணவுப்பொருள்களின் மிகுதி இவ்வருஷத்தில் உண்டாகவேண்டுமானால் அதிக உணவு உற்பத்திக்குத் தேவையான கீழ்க்கண்ட ஐந்து வகைப்பட்ட முறைகளையும் போதனை செய்யவேண்டும்.

(1) ஏற்றுமதி செய்ய வசதியில்லாத சமயத்தில் வியாபாரத்திற்காக சாகுபடி செய்யக் கூடாது. உணவுப்பொருள்களை கொடுக்கக்கூடிய பயிர்களையே வெள்ளாமையிடவேண்டும்.

(2) பழைய நீர்ப்பாசன வசதிகளைப் பழுதுபார்க்கவேண்டும். புதிய வசதிகளை அமைக்கவேண்டும்.

(3) உயர்வான விதைகளைத்தான் உபயோகிக்கவேண்டும்.

(4) புறம்போக்கு ஸ்தலங்கள் எல்லாவற்றையும் சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டும்.

(5) உபரியாக வைத்திருக்கும் கால்நடைகளை விற்றுவிடவேண்டும்.

44704



இந்தியாவின் விவசாயிகள் யுத்த அவச்யத்துக்குத் தேவையான உணவுப்பொருள்களை உற்பத்தி செய்வதுடன் இந்திய மக்கள் எல்லோருக்கும் போதுமான உணவுப்பொருள்கள் எக்காலத்தும் கிடைக்கும்படியாகவும் பாடுபடவேண்டும்.

### சிறந்த விநியோகம்.

இச்சமயம், யுத்தத்தின் காரணமாக பசிப்பிணிக்குட்பட்டு உலகம் அழிந்துவரும் பொழுது உணவுப்பொருள்களுக்கு மிகுதியான தேவை ஏற்பட்டிருக்கிறது. கிணறுகள், குளங்கள் வெட்டுவதிலும், ஏரிகளின் கரைகளை பலப்படுத்துவதிலும், மற்ற நீர்ப்பாசன வசதிகளை அமைப்பதிலும் பொருளைச் செலவிட்டால் அதற்குத் தகுந்த லாபம் கிடைக்கும். விவசாயியின் பரிச்ரமத்திற்குத் தகுந்தபடி விலைவாசியை நிர்த்தாரணம் செய்வதென்று அரசாங்கத்தார்கள் தீர்மானம் செய்துவிட்டார்கள்.

### உபயோகமற்ற விநியோகம்.

கிராமங்களிலும் மற்ற இடங்களிலும் தானியத்தை அளவுக்குமேல் சேமித்து வைப்பது கெடுதலான விநியோகம். அரசாங்கத்தார் அநியாய லாபம் சம்பாதிக்கிறவர்களையும், அளவுக்குமேல் சேமித்து வைப்பவர்களையும் நசுக்கிவிடுவதாக உத்தேசித்திருக்கிறார்கள். சேமித்துவைப்பதிலிருந்து விலைவாசிகள் அதிகரித்துவிட்டன. வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்குக் கஷ்டமுண்டாகிவிட்டது. புத்திசாலியான குடியானவனும், வியாபாரியும், நியாயமான முறையிலும் சீக்கிரமாகவும் லாபமடைய முயலுவதுதான் சரியான நடவடிக்கையாகும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 156. (1-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 24- 7-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 25- 7-43 | சூரக்காடு | ... ,, | 7.00 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 |
| 26- 7-43 | திருவரங்குளம் | ... ,, | 7.00 |
| ,, | வம்பன் | ... ,, | 7.30 |
| 27- 7-43 | மழையூர் | ... ,, | 7.00 |
| ,, | கரம்பக்குடி | ... ,, | 7.30 |
| 28 -7-43 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 |
| 28- 7-43 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 10.45 |
| ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 10.45 |
| ,, | ராமச்சந்திரபுரம் | ... மாலை | 7.00 |
| ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| 29- 7-43 | விராலிமலை | ... ,, | 7.00 |
| ,, | பொருவாய் | ... ,, | 7.30 |
| 30- 7-43 | வாளரமாணிக்கம் | ... ,, | 7.00 |
| ,, | எம்பல் | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 157. (2-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 31- 7-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 1- 8-43 | நீர்ப்பழனி | ... ,, | 7.00 |
| ,, | ஆலூர் | ... ,, | 7.30 |
| 2- 8-43 | காரையூர் | ... ,, | 7.00 |
| ,, | இடையாத்தூர் | ... ,, | 7.30 |
| 3- 8-43 | வடவாளம் | ... ,, | 7.00 |
| ,, | செம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 |
| 4- 8-43 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 |
| 4- 8-43 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 10.45 |
| ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 10.45 |
| ,, | நார்த்தாமலை | ... மாலை | 7.00 |
| ,, | உப்பிலியக்குடி | ... ,, | 7.30 |
| 5- 8-43 | அண்டக்குளம் | ... ,, | 7.00 |
| ,, | கிள்ளனூர் | ... ,, | 7.30 |
| 6- 8-43 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| ,, | விராலூர் | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 24— 7—43 | வெட்டம்விடுதி. |
| 25— 7—43 | மருதன்கோன்விடுதி. |
| 26— 7—43 | கொன்னையூர். |
| 27— 7—43 | பேராம்பூர். |
| 28— 7—43 | கரம்பக்குடி. |
| 29— 7—43 | குழிபிரை. |
| 30— 7—43 | புதுக்கோட்டை. |
| 31— 7—43 | பொன்னமராவதி. |
| 1— 8—43 | ஏம்பல். |
| 2— 8—43 | கீரனூர். |
| 3— 8—43 | கோனாபட்டு. |
| 4— 8—43 | ராயவரம். |
| 5— 8—43 | ஆலங்குடி. |
| 6— 8—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—25-7-43.